இங்ஙனம் இயங்கும் உலகம் த்வீபங்களாகப் பகுக்கப்படுகின்றன. அவைகள் 1. ஜம்பு, 2. ப்ளக்ஷ, 3. சால்மலி 4. குச, 5. க்ரௌஞ்ச, 6. சாக, 7. புஷ்கர என்ற பெயரில் விளங்குகின்றன. இவற்றில் ஜம்பூத்வீபம் என்பது புண்ணியம் மிகுந்த த்வீபம். இந்த த்வீபம் ஒன்பது நாடுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இதில் இமயமலை தொடங்கி சேது வரையில் கொண்ட பகுதிகளே பாரத வர்ஷம்' என்று அழைக்கப்படுகிறது. இந்த புண்ணிய பூமியில் பெருகும் நதிகளும் புனிதமிக்கன. கங்கை, யமுனை அந்தர்வாகினியான சரஸ்வதி, நர்மதை, கபிலை, துங்கபத்ரை, பாலாறு, சோணையாறு, கிருஷ்ணநதி, பீமாநதி, கோதாவரி, காவிரி, தாம்ரபர்ணி, முதலிய பற்பல புனித

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நதிகள் உள்ளன. இதில் கேதாரம், பிரபாஸ க்ஷேத்திரம், குருக்ஷேத்திரம், பிரயாகக்ஷேத்ரம், காலஞ்சரம், மஹாகாலம், புஷ்கரக்ஷேத்ரம், பதரீவனம், சித்திரகூடம், நைமிசாரண்யம், கங்கோத்ரி, அமர்நாத், கோகர்ணம், திரியம்பகம், ஸ்ரீசைலம், அருணாசலம், காளஹஸ்தி, விருத்தாசலம், கும்பகோணம், புண்டரீகபுரம், முதலிய க்ஷேத்திரங்களும், மஹேந்திரமலை, கயிலைமலை, விந்தியமலை, இமயமலை, முதலிய மலைகளையும், அயோத்யாபுரி, மதுராபுரி, மாயாபுரி, காசீபுரி காஞ்சீபுரி, அவந்திபுரி, துவாரகாபுரி, முதலிய ஏழு புண்ணிய நகரங்களும் மோக்ஷத்தையே நல்கவல்லன. இப்படிப்பட்ட நதிகள் ஓடும் பகுதிகளில் அந்தந்த நதிக்கரைகளில் தேவர்களாலும், முநிவர்களாலும் பல சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்றும், பல சிவலிங்கங்கள் ஸ்வயம்புவாகத் தோன்றியும் (இயற்கையாகவே உண்டான சிவலிங்கங்களும்) உள்ள க்ஷேத்திரங்கள் அநேகம் உள்ளன.

இவைகளில் சிவ க்ஷேத்திரங்களும், விஷ்ணு க்ஷேத்திரங்களும் ஒவ்வொரு சதுர்யுகங்களிலும் அழிந்து அழிந்து தோன்றுகின்றன. அழிந்து போன இந்த க்ஷேத்திரங்கள், மீண்டும் எப்படித் தோன்றுகின்றன? என்பதே எனது ஐயம்? இவ்வையத்தைத் தாங்கள் நீக்கியருளவேண்டும்" என்றாள் தேவி.

இதைக் கேட்ட சிவபெருமான் தேவியின் திருமுகத்தைச் சிறிது நேரம் நோக்கியபின் கூறத்தொடங்கினர்.

மூன்றும் அத்தியாயம்

தேவி! நீ கேட்ட கேள்வி மிகச் சிறப்பானது. உனது கேள்விக்குரிய செய்தியை மிகச் சுருக்கமாகச் சொல்கிறேன் கேட்பாயாக.

கிருதயுகம், திரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் ஆகியவற்றில் ஐம்பத்தாறு தேசங்களைப் பல மன்னர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆண்டுவந்தனர். இவர்கள் சூரிய குலத்திலும், சந்திர குலத்திலும் தோன்றியவர்கள். இம்மன்னர்கள் கேதாரம், காசி, காஞ்சி, முதலான, நதிக்கரையிலுள்ள ஸ்வயம்பு லிங்கங்கள் பிரளய காலத்தால் அழிந்துபட்டு இருப்பதைக் கண்ணுற்றனர்கள். புற்றினுல் உருவான, லிங்கங்களும், மணலால் உருவான லிங்கங்களும் உள்ள இடங்களில் ஆலயங்களை எழுப்பினர். பிரகாரங்கள், கோபுரங்கள் கர்ப கிருஹங்களுடன் சிவ லிங்கங்களைச் சமைத்தனர். முருகன், கணபதி தேவி, ஆகியோர்களுக்கும் தனித் தனியான ஆலயங்களையும் அமைத்தனர். புண்ணியமான நட்சத்திரங்களின் பெயர்களில் பல பொய்கைகளை எழுப்பினர். பெரும் பெரும் திருவிழாக்களை எடுத்தனர். கங்கை நதி தொடங்கி சேதுக்கரை வரையில் உள்ள பகுதிகளை நன்கு காத்தனர். சிவ தர்மத்தை விரிவு செய்யவும், என்றும் இத்தருமம் நிலைத்திருக்கச் செய்யவும், பல சிவகைங்கரியங்களைப் புதிதாக ஏற்படுத்தவும், உலகை நீதி நெறி தவருது பரிபாலனம் செய்யவும், எனது பூத கணங்களையும்,பக்தர்களையும், பூவுலகினுக்கு அனுப்பி இப்பணிகளை யெல்லாம் செய்யச் செய்தேன். இவர்கள் உத்தமர்களாகவும் சிவபக்தர்களாகவும், உள்ள பிராமண, க்ஷத்திரிய, சூத்திர குலங்களில் தோன்றினர். இவர்கள், உடல் வலிமையும், பராக்ரமமும் பொருந்திய சேர மன்னர்களாகவும், சோழமன்னர்களாகவும், பாண்டிய மன்னர்களாகவும், இப் பூவுலகில் தோன்றினர்.

சேரர்கள் புகழ்பெற்று ''சேர வம்சம்'' என்ற பெயரில் விளங்கினர். இந்த வம்சத்தில் தோன்றியவர்களில் இக் கலியுகத்தில் இருபத்திரண்டு மன்னர்கள் புகழ்பெற்று விளங்கினர். இவர்கள் அனைவரும் சிவபக்தர்களாகவும், மஹாத்மாக்களாகவும், எப்பொழுதும் விபூதி ருத்ராக்ஷம் தரித்தவர்களாகவும், சிவனடியார்களை வணங்கியும், அவர்களிடம் அன்பு கொண்டவர்களாகவும், சிவபூஜைகளைச் செய்து கொண்டும், சிவகைங்கரியத்திற்கு மனமகிழ்ந்து தானம் கொடுப்பவர்களாவும் இருந்தனர். கங்கைக்கரையில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அறுபத்து நான்கு தீர்த்த கட்டங்களை உருவாக்கினர், தமது கொடைத் திறத்தால். "காசிவிஸ்வநாதர்" முதலிய நூற்று நாற்பத்திரண்டு சிவலிங்கங்களை 'ஞானவாபி' முதலிய கட்டங்களில் பிரதிஷ்டை செய்தார்கள். கேதாரம், பிரயாகை, ஓங்காரம், வைத்தியநாதம், பிரபாஸம், புஷ்கரம், கோகர்ணம், திரியம்பகம், முதலிய க்ஷேத்திரங்களில் கற்பகாலந்தொடங்கி இருபத்திரண்டு மன்னர்கள் சிவ கைங்கரியம் செய்தனர். மற்றும் பல தானங்களைச் செய்தனர். தண்ணீர்பந்தல், அன்னதானம் செய்ய பற்பல சத்திரங்கள், நடைபாதைகள் அமைத்தல் முதலிய தருமங்களைச் செய்தனர். விந்திய மலைக்குத் தென் பகுதியில் உள்ள நாடுகளான ஸ்ரீசைலம், கோகர்ணம், காளஹஸ்தி' திரியம்பகம், அஹோபிலம், திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களில் ஆலயங்களை எழுப்பினர். இதன் எல்லையிலுள்ள சிற்றரசர்களும் பல தீர்த்தங்களை உருவாக்கினர்.

மலையத்துவச மன்னன் முதலான 105 பாண்டிய குல மன்னர்கள் தாமிரபரணிக்கும், வைகையாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்தனர். இப்பகுதிகளில் பல தீர்த்தங்களை உருவாக்கினர். (ஹாலாஸ்யம்) திருஆலவாயில் உள்ள ஆலயம் போன்று பல ஆலயங்களைக் கட்டுவித்தனர். ஜனார்தனம், சுசீந்திரம், காளையார்கோவில், பாபநாசம், தோதாத்ரி, கன்னியாகுமரி முதலிய க்ஷேத்திரங்களை உருவாக்கி பல சிவாலயங்களையும், தீர்த்தங்களையும் உருவாக்கினர். பல அக்ரஹாரங்களைத் தோற்றுவித்தனர். பல அன்னச் சத்திரங்களையும், தண்ணீர்ப் பந்தல்களையும், பல சாலைகளையும் ஏற்படுத்தினர். அந்த வழிகளின் இரு மருங்கிலும் நிழல்தரும் பல மரங்களையும் தங்களது நாட்டின் எல்லைவரை பயிர் செய்தனர். இவர்களுடைய வம்சத்தில்தான் தேவீ! நீ மீனாட்சியாகப் பிறந்து வளர்ந்து செங்கோலோச்சினாய். இவ்வாலயத்திலுள்ள சிவலிங்கத்தில் 'சுந்தரேஸ்வரர்' என்ற பெயரில் உன்னுடன் நான் உரைகிறேன். இந்தப் பாண்டியகுலத்தில் பிறந்தவர்கள் அனைவரும் பக்தியுள்ளம் கொண்டவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இப்பதியில் நான் செய்தருளினேன். மாணிக்கவாசகர். திருஞானசம்பந்தர், அப்பரடிகள், சுந்தரர் ஆகியோர் தமிழ்மறைகளைப் பாடிய தால் இம் மதுரையம்பதி புண்ணியம் பெற்றது. 'தென் கோகர்ணம்' என்றும் 'தென்கயிலாயம்' என்றும் புகழப் படுகின்றது. மேலும் இந்தப் பாண்டிய வம்சத்தில் தோன்றிய அரிமர்த்தன பாண்டியனிடம் மாணிக்கவாசக ரான வாதபுரீசர் மந்திரியாகப் பணிபுரிந்தார்.

சேர, சோழ, பாண்டியர்களும், கேரளீயர்களும், ராமேஸ்வரம், தில்லை, வேதாரணியம், திருவாரூர், ஸ்ரீ கண்டம், திருவானைக்கா முதலிய க்ஷேத்திரங்களிலும், திருச்சி மலைக்கோட்டையில் உள்ள 'மாத்ருபூதேஸ்வரர்' (தாயுமானவர்) ஆலயத்தையும் கட்டுவித்தனர். மேலும் காவிரியின் இரு கரையிலும் பல ஆலயங்களைக் கட்டு வித்தனர். பற்பல சிவதருமங்களைச் செய்தனர். இங்கு பற்பல சாதிகளில் நாயன்மார்கள் தோன்றினர்.

தேவி! இதுவரை சேர, பாண்டிய மன்னர்களைப்பற்றி சுருக்கமாகக் கூறினேன். இனி சோழ மன்னர்களின் வரலாற்றைக் கூறுகிறேன். மிகவும் பக்தி சிரத்தையுடன் கேட்பாயாக என்று கூறத்தொடங்கினர்.

என்று கூறிய சூத முனிவர், மற்ற முனிவர்களுக்கு சோழ மன்னர்களின் வரலாற்றைக் கூறத்தொடங்குகிறார்.

நான்காம் அத்தியாயம்

சோழ மன்னர்களின் பெருமை

சூத முனிவர் கூறுகிறார் :

சிவ கணத்தில் இருப்பவர்களை எம்பெருமான் பூவுலகில் பிறக்கச் செய்தார். இவர்கள் பூவுலகில் பிறந்து தம் தலைவனான சிவபெருமானிடத்தில் பேரன்பு கொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்ந்தனர். இவர்களை 'சோழர்கள்' என்று மக்கள் அழைத்தனர். இவர்கள் போரில் எதிரிகளை வென்று புகழ் பெற்றனர். சிவனடியார்களை வணங்கித் துதிப்பவர். வேதியர்களுக்கும், அடியார்களுக்கும் பல தானங்களைச் செய்பவர். சோழ மண்டலம் முழுதும் பல சிவாலயங்களை எழுப்பியவர்கள். 'ஸ்வயம்பூ' ஸ்தலங்களில் உள்ள ஆலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்தவர்கள். புண்ணிய நதிகளின் கரைகளிலும், தனிப்பட்ட ஸ்தலங்களிலும், தனியாகவும், பிறவகையாலும் பல பிரகாரங்களுடனும் கோபுரங்களுடனும் பற்பல ஆலயங்களை எழுப்பினர். மேலும் பல தீர்த்தங்களையும், தடாகங்களையும் எடுப்பித்தவர்கள். பிராமணர்களுக்கு அக்ரஹாரங்களை ஏற்படுத்தினார்கள். பல இடங்களில் அன்னசத்திரங்களையும், மடங்களையும் எழுப்பினார்கள். சாலைகளின் ஓரங்களில் பல மரங்களைப் பயிரிட்டனர். வழிச்செல்வோர் ஓய்வெடுக்கப் பல மண்டபங்களைக் கட்டினார்கள். வழிச்செல்வோர்கள் தாகத்தினால் வருந்தாமல் இருக்கும் பொருட்டு பானகம், நீர்மோர், தண்ணீர் ஆகியவை வழங்கும் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்கள். நதிகளில் நீராட வசதியாக இருக்கும் பொருட்டு கருங்கற்கள் கொண்டு படித்துறைகளைக் கட்டினார்கள். நதிகளின் இருமருங்கிலும் பல இடங்களில் புஷ்ய மண்டபங்களை நிருமாணித்தார்கள். பாசன வசதிக்காக பல ஏரிகளையும், நீர்த்தேக்கங்களையும், கிணறுகளையும், பொய்கைகளையும் உருவாக்கினார்கள். பெரும் பெரும் மண்டபங்களை அமைத்தார்கள். வெற்றியால் கிடைத்த பொருட்களை சிவாலயங்களுக்கு அர்ப்பணித்தார்கள். நான்கில் ஒரு பகுதியை வரியாகப்பெற்று படைகள், வேலையாட்கள் போன்றவர்களுக்குச் செலவு செய்தும் இதர நிர்வாகச் செலவுகளையும் செய்தனர். வெல்லம், சுண்ணாம்பு, செங்கல் போன்ற பொருட்களை வரிகளாக வசூலித்தனர். மக்களைக்காத்தனர். குற்றம் செய்பவர்களை தண்டித்தனர். நீதியை நன்கு அறிந்து நெறியுடன் அரசாண்டனர். காமம், கோபம், முதலியவற்றை அடக்கியவர்களாக வாழ்ந்தனர். தயை, தாக்ஷிண்யம் அற்றவர்களாகவும், ஏழை, எளியவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

களையும், குடும்பத் தலைவனற்றவர்களையும், குருடர்போன்ற அங்கஹீனமுள்ளவர்களையும் காத்தனர். ஆலயங்களுக்காகப் பல (இறையிலி) நிலங்களை அளித்தனர். பதினாறு வகையான தானங்களை பதினாறுமுறை தானமாகச் செய்தவர்கள். சந்தனம், தாம்பூலம் முதலிய போகப் பொருட்களை அனுபவித்துக்கொண்டு குளிர்ச்சி பொருந்திய இடங்களில் வசிப்பவர்கள். இரவு நேரங்களில் ரதங்களில் ஏறிச் சென்று எளியவர்களைக் காப்பவர்கள். காசி முதல் சேது வரையில் மக்கள் நடக்கும் பாதைகளில் வழிப்பறிக் கொள்ளை முதலியவை நடைபெறாவண்ணம் ஆட்சி செய்பவர்கள். சிறியபடைகளே தம்மிடம் இருந்தபோழ்தும் சிவபக்தியால் எதிரிகளுடன் போர் செய்து வெற்றி பெறுபவர்கள், இவ்வளவு பெருமையுடன் கற்பகாலந் தொடங்கி பல்லாயிரக் கணக்கான ஆண்டு காலமாக ஆட்சி செய்கின்றனர். இந்தச் சோழ மண்டலத்தை ஆண்ட சோழமன்னர் ஒவ்வொருவரின் சரித்திரங்களையும் உங்களுக்குச் சொல்கிறேன். கேட்பீராக என்று சூத முனிவர் ஏனைய முனிவர்களுக்குக் கூறலுற்றார்.

ஐந்தாம் அத்தியாயம்

நைமிசாரண்ய முனிவர்கள் :-

முனிவர் பெருமானே! பதினாறு சோழமன்னர்கள் இந்த பூமியில் எங்கெங்கு தோன்றினார்கள்? சிவ கைங்கரியங்களைச் செய்த மன்னர்களின் பெயர்கள் என்ன? பாபங்களைப் போக்கவல்ல அச் சிவபக்தர்களின் சரித்திரங்களைக் கேட்கவிரும்புகிறோம். அதனை எங்களுக்குக் கூறவேண்டும் என்றனர்.

முனிவர்களின் விருப்பத்தை அறிந்த சூதமுனிவர் "நைமிசாரண்ய முனிவர்களே! வியாச முனிவர் "பவிஷ்ய புராணத்தில்" முன்பு சொல்ல நான் கேட்டவண்ணம் "பதினாறு சோழமன்னர்களின் வரலாற்றைக் கூறுகிறேன்" என்று முதலில் குலோத்துங்க சோழனின் வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சர்வட" என்ற கிராமம். இதில் குலோத்துங்கன் என்ற பெயருடன் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். இவனது துணைவியின் பெயர் கோமளாங்கி. பெயருக்கு ஏற்ப மிகுந்த அழகி. கணவனின் பணிவிடைகளை மிகுந்த அன்புடன் செய்வாள். மாத்திரையாகிலும் 'நா' தவறுத வள். தீதில் மனையறம் புரிந்து வந்தனர். விருந்தினர்களை மலர்ந்த முகத்துடன் அழைத்து பூஜிப்பர். விருந்தளித்து உபசரிப்பர்.

இப்படி இருக்க ஒருநாள் சிவபெருமான் காஷாயந் தரித்து, விபூதி ருத்ராக்ஷம் அணிந்து சிவனடியார்போல் குலோத்துங்கனுடைய இல்லத்திற்கு வந்தார். அவருடைய திருமேனியில் விபூதியும் — ருத்ராக்ஷமும் காஷாயமும் அணிந்திருப்பதைக் கண்ட குலோத்துங்கன் தனது துணைவி யுடன் அவரை வணங்கி இனிய மொழிகளால் அவரிடம் கூறினன்.

"ஸ்வாமி! தாங்கள் இந்த இல்லத்திற்கு எளி வந்திருப் பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தாங்கள் எளியோமில்லத்தில் உணவு கொள்ள வேண்டும். அப் போதுதான் நான் பிறவி எடுத்ததின் பயனைப் பெற்றவனுக ஆவேன். தங்களைக் காணும்போது எனக்கு சிவபெருமா னுகவே காட்சியளிக்கின்றீர்கள். ஆண்டவனுக்கும், அடிய வருக்கும் வித்யாஸமில்லை. தாங்கள் மனம் மகிழ்ந்தால் எம்பெருமானே "மகிழ்ந்தது போலாம்", என்று கூறி அடியாருடைய திருவடிகளை; நீரால் கழுவி ஆசனத்தில் அமரச் செய்தனர். அத் திருவடிகளுக்கு சந்தனமிட்டு, மலரால் அருச்சித்து, அறுசுவை விருந்து படைத்தனர். தாம்பூலம் கொடுத்து வணங்கினர். இவர்களுடைய பக்தியை அறிந்த சிவபெருமான் மகிழ்ந்து "நீங்களிருவரும் பக்தி சிரத்தையுடன் உபசரித்தமையால் யாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் செய்த புண்ணியத்தின் பயனுக, சோழமண்டலத்தின் அரசனுக உனக்குப் பட்டம் சூட்டுகிறேன், உன்னைத் தொடர்ந்து உன் சந்ததியினராக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதினாறு தலைமுறையினர் இந்தச் சோழ மண்டலத்தை ஆட்சி செய்வார்கள். அவர்கள் எனது பக்தர்களாகவும், எனக்குத் தொண்டு புரிபவர்களாகவும் இருப்பார்கள்." என்று கூறிய சிவபெருமான் குபேரனை மனத்தால் நினைத்தார். நினைத்தவுடன் அங்கு தோன்றினான் குபேரன். "ஸ்வாமி! நான் ஆற்றவேண்டிய பணி யாது? கட்டளையிட்டருள்க." என்று அடிபணிந்தான்.

ஆறாவது அத்தியாயம்

இறைவன் கூறினார் ;—

"இந்த தண்டகவனத்திற்கு குலோத்துங்கனை அரசனாக்குகிறேன். இவனது வம்சாவழியினர் ஆட்சிசெய்யும் பொருட்டு இவனுக்கு அரசை இப்போது கொடுத்திருக்கிறேன். எனது ஆலயங்களை நிருமாணிப்பதற்குத் தேவையான நிதிகளை நீ இவனுக்கு அளிப்பாயாக. உனக்குத் தேவையான பொருட்கள் சமீவனத்தில் கிடைக்கும். இவ்வனம் முன்பு திருவையாற்றுக்குத் தெற்கே இரண்டுமைல் தொலைவில் இருந்தது. குபேரனே! உனது புஷ்பக விமானத்தை ராவணன் தடுத்து நிறுத்தி அவ்விமானத்தை அபகரித்துக் கொண்டான். அதனால் மனம் வருந்திய நீ. இந்த சமீவனத்தில் இருந்து கொண்டு ஆனந்தவல்லி உடனுரை தஞ்சபுரீஸ்வரரான என்னைக் குறித்து கடுந்தவம் செய்தாய். அதனால் மனம் மகிழ்ந்து நான் உனக்கு நிதிபதிக்குரிய பதவியை அளித்தேன். மேலும் இந்த காடு நகரமாக மாறி சிறப்புற்று விளங்கும் என்று அருளிச் செய்தேன். இதனால் இப்பதி தனதான்யங்களைப்பெற்று 'தென் அளகாபுரி" என்ற சிறப்புப் பெயரைப் பெறும் என்றேன், இங்கே வறுமை இல்லை, பாபங்கள் செய்வோரில்லை என்றும், இங்கு வசிக்கும் மக்களுக்கு தன தானியங்கள் பெருகும் என்றும் தஞ்சாபுரீசரான நான் முன்பு உனக்கு அருள்பாலித்தேன். அருள்பாலித்தவுடன் அவை அனைத்துமே அந்தக் கணத்திலேயே வந்தடைந்தன. ஆனந்தவல்லியின் திருவருளால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேரானந்தம் அடைந்தனர். இந்த நகரில் மரணமுற்றவர் சிவலோகத்தில் சிவஸாரூபம் பெற்றனர்". ஆகவே இவ்வளவு சிறப்பு மிகுந்த இந்த சோழ தேசத்திற்கு விரைவில் (குலோத்துங்கனை) இவனுக்கு முடிசூட்டு வாயாக. நீ இந்த உத்தமமான அரசனுக்குத் தேவையான செல்வங்களைக் கருவூலத்தில் நிறப்புவாயாக. என்று சிவபெருமான் கூறியதும், குபேரன் (நிதிபதி) குலோத்துங்கனுக்கு சிறந்த ஆடைகளையும், திவ்ய ஆபரணங்களையும் அணிவித்தான். நவரத்தின மயமான சிம்மாசனத்தில் கோமளாங்கியுடன் குலோத்துங்கனை அமரச்செய்தான். தாதிகள் குடைபிடித்தனர். சாமரம் வீசினர். நவரத்ன மயமான பட்டத்தை அவனது நெற்றியில் சூட்டினான். கதிரவனை நிகர்த்த கிரீடத்தை தலையில் சூட்டினான். மாலை, கேயூரங்களை அணிவித்தான். வாசனை திரவியங்களை அவனது உடலில் பூசினான். அப்போது சிவபெருமான் இடபாரூடராய் தனது பூத வேதாளங்களுடன் காட்சியளித்தார். முப்பத்து முக்கோடி தேவர்களும் குலோத்துங்கனுக்குக் காட்சியளித்து அருள்பாலித்தனர். அதைக் கண்ட சோழகுலத்து அரசன் குலோத்துங்கன் கோமளாங்கியுடன் சிவபெருமானின் திருவடிகளில் விழ்ந்து நமஸ்கரித்துத் தோத்திரம் செய்தானர். (இத் தோத்திரம் தமிழாக்கம் செய்யப்படவில்லை)

"ஸ்வாமி! தாங்கள் அளித்துள்ள இந்த அரச பதவி எனக்குத் தேவைதானா? இதனால் 'மதம்' அல்லவோ வந்து சேரும்? உனது பக்தியால் கிடைப்பது முக்தி அல்லவா? இந்த அரச பதவி எனக்கு வேண்டாம், என்று குலோத்துங்கன் வேண்டினான். இதைக்கேட்ட இறைவன், 'சோழ மன்னா! நீ எனது சிவகணத்தில் சிறந்து விளங்கியவன். நான்கு வருணத்தினரையும் காக்கும் பொருட்டு உன்னை இப் பூவுலகினுக்கு அனுப்பி பிறக்கச் செய்துள்ளேன். ஸ்வயம்புவாக (தான்றோன்றியாக) எழுந்தருளியிருக்கும் ஆலயங்களை புனருத்தாரணம் செய்க. நீயே சோழகுலத்திற்கு முதல்வனாக இருப்பாய். உன்னைத் தொடர்ந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உனது வம்சாவழியினராக வந்த பதினாறு மன்னர்கள் இச் சோழமண்டலத்தை ஆட்சி செய்வார்கள். சிவத்தொண்டு புரிவதற்காக உனக்கு நவநிதிகளையும் அளிக்கின்றேன். உனக்கு உதவிகளைச் செய்ய குபேரன் உன்னுடனே இருப் பான். சிவாலயங்களை நிருமாணிக்கும் உனக்கு உதவி செய்வதற்காகவே விஸ்வகர்மாவும் பூவுலகில் தோன்று வான். அவன் உனது கட்டளையை எப்பொழுதும் நிறை வேற்றுவான். மது, மயன், விஸ்வகர்மா, தாதா, விதாதா, முதலியவர்கள் பூவுலகில் தோன்றி அனைத்துச் சிற்பிகளை விடச் சிறந்தவர்களாக விளங்குவர். அவர்கள் காவிரியின் இருமருங்கிலும் தங்களது இருப்பிடங்களாகக் கொள்வர். அவர்களைக் கொண்டு ஸ்வயம்பூ ஸ்தலங்களில் ஆலயங்களை நிருமாணிப்பாயாக. சிவத்தொண்டைச் செய்து இறுதியில் கயிலாய பதவியை அடைவாயாக'' என்று கூறி விசுவ கர்மாவை அழைத்தார் சிவபிரான்.

விசுவகாமாவே ! நீ உன்னுடன் ஐந்து சிற்பிகளை அழைத்துக்கொண்டு பூவுலகில் பிறப்பாயாக. சிற்ப நூல் களில் கூறியவண்ணம் அழகிய ஆலயங்களை அமைப்பாயாக. இந்த குலோத்துங்கனுடைய சந்ததியில் பதினாறு மன்னர் கள் தோன்றி சோழமண்டலத்தை ஆட்சி செய்வார்கள். அந்நாள்வரை நீயும் உனது வம்சத்துடன் பூவுலகில் வாழ்வாயாக. குபேரன் தேவையான செல்வத்தை அளிப் பான். நீ சிற்பங்களையும், ஆலயங்களையும் அமைக்க வேண்டும். மன்னனுக்கு நீங்களிருவரும் உதவி செய்யுங்கள் அரசன் தனது தேவைக்குச் செல்வத்தை விரும்பினாலும் அவன் விரும்பும் செல்வத்தை குபேரன் அளிப்பான். நிலத் தைத் தோண்டும்போது தேவையான செல்வத்தை அளிப்போம் நாம்''. என்று எம்பிரான் கூறினார்.

இதைச் செவியுற்ற விசுவகர்மா, சிவனிடத்தில் கூறினான், ''சுவாமி ! தங்களுடைய ஆலயத் திருப்பணியால் எனது சிற்பக்கலை புனிதமடைகிறது. தங்களது உத்திர வின்படி மன்னனுக்கு எனது உதவிகளைச் செய்கிறேன்.''

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றான். அருகிருந்த குபேரன் சுவாமி! சோழ மன்னர்கள் சிவ கைங்கரியத்திற்காகப் பூமியில் எப்பகுதியைத் தோண்டினாலும் அங்கெல்லாம் நவ நிதிகளையும் புதையல்களாக அளிக்கின்றேன். எங்கெல்லாம் நிலத்தில் புதையல்கள் (நிதிகள்) இருக்கின்றனவோ அதையெல்லாம் அவர்களுக்கு அறியப்படுத்துகிறேன். சோழமன்னர்களுடன் எப்பொழுதும் நாங்கள் இருவரும் இருக்கிறோம்" என்று கூறினான். விசுவகர்மனும், குபேரனும் இறைவனின் திருவடிகளைத் தொழுதனர். இதைக்கண்ட குலோத்துங்கன் மகிழ்ந்து சிவபிரான் திருவடிகளைத் தொழுதான். இந்த நிகழ்ச்சிகள் யாவையும் கனவில் கண்டான் மன்னன்.

ஏழாவது அத்தியாயம்

குலோத்துங்கன் காலையில் எழுந்து பார்த்த போழ்து பட்டம் கட்டியிருந்தது. மகுடம் சூட்டப்பட்டிருந்தது. அவனுடைய இல்லத்தையடுத்துள்ள தோட்டத்தில் நிலத்தைத் தோண்டினான். தோண்டும்போது பெருஞ்செல்வம் கிடைத்தது. அச்செல்வத்தால் யானைப்படைகளையும், குதிரைப்படைகளையும் பெற்றான். பல வேலையாட்களைத் தனக்கு ஏற்படுத்திக் கொண்டான். நாட்டை ஆளத் தொடங்கினான். காவிரியின் இருமருங்கிலுமுள்ள அடர்ந்த இருண்ட காடுகளை அழித்து நாடுகளை உண்டாக்கினான். நூற்றுக்கணக்கான சிவாலயங்களை அமைத்தான். திருச்சிராப்பள்ளியில் மலைமீது சிவாலயத்தை எழுப்பினான். மாத்ருபூதேஸ்வரப் பெருமானை பிரதிஷ்டை செய்தான். மலையின் உச்சியில் விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்தான் சுகந்த குந்தலாம்பாளை அங்கு பிரதிஷ்டித்தான். திருச்சிக்கு மேற்கே குளித்தலை அருகில் உள்ள தலமான வாட்போக்கி (இரத்தினகிரி என்று புராணம் கூறும்) ரத்னகிரியில் உள்ள ஆலயத்தையும் அருகில் உள்ள ஈங்கோய்மலை என்று வழங்கப்பெறும். மரகதாசலேசர் ஆலயத்தையும் (பச்சை வண்ணநாதர்) சிற்பிகளை அழைத்து ஜீர்ணோத்தாரணம் செய்யச் செய்தான். அகிலாண்டநாயகி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸமேத ஜம்புநாதஸ்வாமியின் ஆலயத்தை கர்பகிருகம், கோபுரம், பிரகாரம், மஹாபிரகாரங்கள் முதலியவற்றுடன் ஆலயத்தை எழுப்பினன். ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்கும் திருப்பணி செய்தான். ஜம்புநாதர் ஆலயத்தை தரிசித்து, அகிலாண்டா நாயகி சமேத ஜம்புநாதரை வழிபட்டான். இது தக்ஷிண கோகர்ணம் என்று அழைக்கப் படுகிறது. இவ்வளவு சிறப்பும் புண்ணியமும் மிகுந்த ஆலயத்தை சிற்பிகளைக் கொண்டு கட்டுவித்தான். ஸ்ரீபஞ்சநதிஸ்வரர் (ஐயாரப்பர்) ஆலயத்தையும், ஸ்ரீப்ராயணேஸ்வரர் (திருப்பழனம்) ஆலயத்தையும் கர்பகிருஹம், கோபுரம் பிரகாரங்கள் முதலியவற்றுடன் கட்டுவித்தான்.

திருவையாற்றுக்கு வடதிசையில் உள்ள 'ஸமீவனம்' சென்றுன். அவ்வனம் பராசரமுனிவர் தவமியற்றிய பெருமையுடையது நாளடைவில் இக்காடு நகரமாக மாறியது. தஞ்சாசுரனைப் போரில் அழித்த சிவபெருமான் ஆனந்தவல்லியுடனுறை தஞ்சபுரீசராக அங்கு காட்சியளித்து குபேரனுக்கு அருள்பாலித்த இடம். அந்த நகரைச் சுற்றி எட்டு திக்குக்களிலும் ஏகவீரா. ஜயந்தி மர்தினி, மஹிஷாசுரமர்தினி, மாரி, ரேணுகா, காளி, கோடியம்மன் ஆகிய எட்டு மஹா சக்திகளை பிரதிஷ்டை செய்தான். மன்னன் குலோத்துங்கன். தஞ்சாசுரனை சிவபெருமான் சூலத்தால் வீழ்த்தியதால் அவன் உயிர்பிரியும் தருணம்" "எனது பெயரால் இந்த நகரம் விளங்கவேண்டும்" என்று அவன் வரம் வேண்டியதால் இந்நகருக்கு 'தஞ்சாவூர்' என்று வழங்கலாயிற்று. இங்கிருந்து ஈசானியத்திக்கில் (வடக்கு) எழுந்தருளியுள்ள சிவபிரானை வசிட்ட முனிவர் பூசித்தார். அங்கு ஒரு திருக்குளத்தை உண்டாக்கினுர். அது வசிட்ட தீர்த்தம் என்று வழங்கலாயிற்று. தென்திசையில் உள்ள ஆலயத்தில் தேவியுடன் வைத்தியநாதர் எழுந்தருளி அருள் பாலிக்கின்ருர். திவ்யமான உருவுடன் ஹரன் காட்சி அளிக்கிருர். நிருதிதிக்கில்உள்ள தேவதீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்களுடைய எண்ணங்கள் நிறைவேறுகின்றன

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அங்கு தேவியுடன் உரையும் இறைவனின் பெயர் 'கரதலேஸ்வரர்' தஞ்சபுரீஸ்வரனின் ஆலயத்தின் மேற்குத் திசையில் நீலமேகப் பெருமானும், நரஸிம்மப் பெருமானும் எழுந்தருளியுள்ளார்கள். இவர்களைத் தரிசனம் செய்த குலோத்துங்க மன்னன் கொங்கணேஸ்வரரைத் தரிசனம் செய்தான் கொங்கண சித்தரின் தவத்திற்கு மகிழ்ந்த சிவனுறையும் தலம். இத்தலம் மிக அற்புதமாக இருந்தமையால் அந்த ஆலயத்தைக் கட்டுவித்தான். ஆனந்தவல்லி உடனுறை தஞ்சபுரீஸ்வரருக்குக் கோபுரங்களையும், பிரகாரங்களையும் கட்டுவித்தான். 'சுதாபுஷ்கரிணி' (ஐயங்குளம்) என்ற பொய்கையை உண்டாக்கினான்.

இப்படியாக 90 ஆண்டுகள் சிவ கைங்கரியங்களைச் செய்தான். நாட்டையும் நான்கு வருணத்தினரையும் நன்கு பரிபாலித்தான். மடங்கள், அன்னசத்திரங்கள், அக்ரஹாரங்கள், ஆலயங்களில் திருவிழாக்கள் முதலிய தர்மகாரியங்களைச் செய்வித்தான். தனது மகனை தேவசோழனுக்குப் பட்டம் கட்டிவிட்டு தனது மனைவியுடன் சிவனடிக்கீழ் சென்றான்.

எட்டாவது அத்தியாயம்

தேவ சோழன் தனது மந்திரிப் பிரதானிகளுடன் நாட்டை தர்ம நெறி வழுவாது காத்தான். காமிகவம்சத்திலுதித்த ஸௌந்தர்யவல்லியைத் திருமணம் செய்து கொண்டான். தனது தந்தையைப் போலவே சிவ வழிபாடுடையவன். பெரும் பொருட் செலவு செய்து சிற்பிகளைக் கொண்டு பல சிவாலயங்களைக் கட்டுவித்தான். மத்யார்சுனமான திருவிடைமருதூர், கும்பகோணம், திருவெண்காடு, திருத்துருத்தி, ஸ்ரீவாஞ்சியம், சிறுகுடி, குத்தாலம், துர்கேஸ்வரம் முதலிய ஸ்தலங்களில் சிவாலயங்களையும், அக்ரஹாரங்களையும், எடுப்பித்தான். அறுபது ஆண்டு காலம் தரும நெறியுடன் ஆட்சி செய்து இறுதியில் சிவபதத்தைப் பெற்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த தேவ சோழனின் புதல்வன் சசிசேகர சோழன். இவனுடைய துணைவியின் பெயர் சண்பகவல்லி. தர்மத்துடன் தனது தந்தையைப் பின்பற்றி நாட்டை ஆண்டான். சிற்பிகளை அழைத்து மனம் மகிழும் அளவில் பொன்னை கொடுத்து கீழே காணும் ஸ்தலங்களில் ஆலயங்களைக் கட்டுவித்தான். மாயூரம் என்கிற மயிலாடுதுறை, வைதீஸ்வரன் கோயில், திருக்கடையூர், திருவாலங்காடு, திருக்கோடிக்கா, சுந்தரேசர் ஆலயம், மதுரை, திருப்பாற்றுறை, திருநள்ளாறு திருகற்குடி, திருமறைக்காடு, தீர்கேசம் என்கிற திருப்பாண்டிக் கொடுமுடி, கோவடேசம், கர்வடேசம், தேஜினிவனம் (திருவீழிமிழலை), திருவைகாவூர் முதலிய சிவஸ்தலங்களில் சிவாலயங்களையும், வைஷ்ணவஸ்தலங்களில் விஷ்ணுவாலயங்களையும் எடுப்பித்தான். சுயம்பூஸ்தலங்களில் சுமார் 60 ஆலயங்களை எடுப்பித்தான். காவிரியின் இருமருங்கிலும் சோழநாடு வியாபித்து இருந்தது. அப்போது இதற்கு இவனே அரசனாக இருந்தான். இவனுடைய மகள் குணவல்லி பெயருக்கு ஏற்ற குணத்தைப் பெற்றிருந்தாள் இவளைப் பாண்டிய மன்னனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். **சிற்பிகளை விஸ்வ பிராமணர்களாகச் செய்தான்.** சிவாகமங்களைக் கற்றுணர்ந்த சிவாச்சாரியர்களுக்கு, ஆலயங்களுக்கு ஈன்றுள்ள நிலங்களை (குடியிருக்க) அளித்தான். சிவாகம விதிப்படி பூஜைகளை நிறைவேற்ற ஏற்பாடுகளைச் செய்தான். இப்படி இருக்க ஒருசமயம் காவிரியில் வெள்ளம் ஏற்பட்டதால் கிராமங்களும், பயிர்களும், வீடுகளும், குடில்களும் அழிந்தன. இதனால் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் வாடினர். மீண்டும் புதிய நாட்டையே உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைத் தங்கள் மன்னனிடம் "தாங்கள் மீண்டும் நிலமனைத்தையும் சீர்திருத்தம் செய்யுங்கள்" என்று பொதுமக்கள் முறையீடு செய்தனர். இதனால் மன்னன் காவிரிக்கரையில் ஒரு மண்டல காலம் (48 நாட்கள்) உண்ணாநோன்பு நோற்று இறைவனைப் பூஜித்தான். அப்போழ்து "மன்னா! காவிரியின் குறுக்கே அணை எழுப்புக. அதனால் தண்ணீர் சேதமாகாதவாறு தடுக்கப் பெற்று சோழமண்டலம் முழுதும் பயிர் செய்வதற்கு ஏற்றவாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தண்ணீரைப் பயன்படுத்தலாம்" என்று வானொலி எழுந்தது. இதனைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து நதிக்கரையில் தான் வணங்கிய இறைவனுக்குப் பிரகாரம், மண்டபம், முதலியவற்றை எடுப்பித்தான். மன்னனின் கனவில் அன்னைக் காவிரி தோன்றி "மன்னா! நீ என்மீது அணை எடுப்பித்துச் சூரிய சந்திரர்கள் உள்ள வரை புகழுடன் விளங்குவாயாக" என்று கூறி, அகண்டமான (துண்டற்ற காவிரியை) என்னை கண்டமாக (துண்டாக)ச் செய்ய அணை எடுப்பாயாக. அந்த அணையை திருவரங்கத்திற்குக் கிழக்கே காவிரி இரண்டாகப் பிரியும் இடத்திற்கு முன் பஞ்சலோகங்களைக் கொண்டும், மண், சுண்ணாம்பு, முதலிய வற்றைக் கொண்டும் அணை எடுப்பாயாக" இதனால் வெள்ளம் ஏற்படாமல் தடுக்க இயலும். பயிர்களுக்கும் உயிர்களுக்கும் அழிவு ஏற்படாது. உனது புகழும், கொடையும் இந்த அணையின் உருவில் நெடிது காலம் விளங்கும்." என்று கூறி மறைந்தாள் அன்னைக் காவிரி.

மன்னனும் காவிரித்தாயின் அருளால் அணை எடுத்தான். இதனால் "காவிரிக்கு அணை எடுத்த காவலன்" என்ற பெயரையும் பெற்றான் 'சசிசேகரன்'. பிறகு அவன் தனது மகன் 'சிவலிங்கன்' என்பவனுக்கு முடிசூட்டி நாட்டை அவனிடம் நல்கினான். 70 ஆண்டுக்காலம் உயிர் வாழ்ந்து இறுதியில் தனது மனைவியுடன் கைலையை அடைந்தான்.

ஒன்பதாவது அத்தியாயம்

மன்னன் சிவலிங்க சோழன் பத்மவல்லி என்னும் மங்கை நல்லாளைத் திருமணம் செய்துகொண்டு ஆட்சி செய்தான். தனது முன்னோர்களைப் போலவே பல ஆலயங்களை எடுப்பித்தான். சாக்ஷிநாதர் ஆலயம், சுவாமிமலை, ஒப்பிலியப்பன் கோவில், சோமேசம், பட்டீஸ்வரம், திவ்யேசம், பாதாளேசம், திருவாரூர் புற்றிடங்கொண்டார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆலயம் முதலிய நூற்றுப் பத்தொன்பது ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தான், இவன் ஒரு சமயம் சிவதரிசனத்திற்காக இவனது துணைவி பத்மவல்லி, அரசகுமாரன் வீரேஸ்வரன் ஆகியோருடன் திருவாரூர் சென்றான். ஆலயம் சென்று வழிபட்டான். சிலகாலம் திருவாரூரிலேயே வாசம் செய்தான். அப்பொழுது ஒருநாள் இவனது மகன் ரதத்தை வீதியில் வேகமாகச் செலுத்தினான். அச்சமயம் பசுங்கன்று ஒன்று துள்ளி ஓடிவந்து தேர்சக்கரத்தில் சிக்கிக்கொண்டு சிதைந்து மாண்டது. மாண்டு கிடந்த பசுக் கன்றைக் கண்டான் அரசகுமாரன். அச்சமயம் கன்றின் தாய்ப்பசு கத்திக் கொண்டும், கண்ணீர் சிந்திய வாறும் ஓடிவந்து, அரண்மனை வாயிலடைந்து கதறியது. காவலர்கள் கோல் கொண்டு துறத்தினர். அப்பசு செல்லாது மீண்டும் மீண்டும் வந்து கதறியது. அரண்மனை வாயிலுக்கு மந்திரி பிரதானிகளுடன் வந்த சோழமன்னன், கண்ணீர் பொழிந்து வருந்துகின்ற பசுவைக் கண்டான். காவலர்களிடம் "இந்தப் பசு ஏன் இங்கு வந்து கண்ணீர் பொழிகின்றது?" என்று கேட்டான் மன்னன். காவலர்கள் நடந்த செய்தியைக் கூறினர். இதைக் கேட்ட மன்னன் கோபமுற்று தன் மைந்தனை அழைத்தான்." மகனே! பசுக்களுக்கும், மறையோர்களுக்கும் பேருதவி செய்துவருவது இச் சோழகுலத்து மரபு. அப்படியிருக்க இப் பசுவின் கன்றை ஏன் கொன்றாய்?" என்று விசாரணை செய்தான். 'இறுதியில் "பசுவின் கன்று எப்படி உயிர் துறந்ததோ அப்படியே தனது மைந்தனும் உயிர் துறக்க வேண்டும், என்ற தண்டனை கொடுத்தான். தேரைச் செலுத்தி கன்று இரண்டு துண்டாக எங்ஙனம் ஆனதோ, அப்படியே தனது மகனையும் மன்னன் இரு துண்டுகளாக்கினான். இந்த நிகழ்ச்சியைக் கண்ட மக்கள் அதிர்ச்சியுற்று வாய்ப் புதைத்து நின்றனர்.

அச்சமயம் வானொலி எழுந்தது. "எனது மகன்" "எனது பிள்ளை" என்கிற "எனது, என்னுடையது" என்ற பற்றில்லாமல் நீதியொன்றையே நீ பெரிதாகக்கொண்டு,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உனது நெறியில் நீ நிலைத்து நின்றாய். ஆகையால் உனது மகனும், பசுக்கன்றும் முன்போல் உயிர்பெற்று எழும்'' என்று வான் ஒலித்து மறைந்தது. அடுத்த கணம் அரச குமாரனும், பசுக்கன்றும் உயிர்பெற்று எழுந்தனர். இவ் வதிசயத்தைக் கண்ட மக்கள் மகிழ்ந்தனர். பசுவை நன்கு பூசித்து வணங்கினான் மன்னன். துன்பத்தால் கண்ணீர் சொறிந்த பசுவின் கண்கள் இப்போது அதன் மகிழ்வை வெளிப்படுத்தின.

மன்னன் புற்றிடங் கொண்ட பெருமானையும், தியாகேசப் பெருமானையும் வணங்கித் தோத்தரித்தான். மன்னன் சிவலிங்க சோழன் சப்தவிடங்க ஸ்தலங்களை நிர்மாணித்தான்[1]

இம்மன்னன் சிவலிங்க சோழன் தனது மகன் வீரசோழனுக்குப் பட்டம் சூட்டினான். இறுதியில் சிவப் பேற்றைப் பெற்றான்.

இவன் மகன் 'வீர சோழன்' தனது தந்தையைப்போல் சிவத்தொண்டுகள் பல புரிந்தான். (காவிரிக்குக் கிளை நதியைத் தோற்றுவித்தான். அதற்குத் தனது பெயரையே வைத்தான். அது இன்றும் 'வீரசோழனாறு' என்ற பெயரில்

---

1 விடங்கஸ்தலங்கள்	ஸ்வாமி பெயர்	நடனம்
திருவாரூர்	வீதிவிடங்கர்	அஜபாநடனம்
திருநள்ளாறு	நகரவிடங்கர்	உன்மத்தநடனம்
திருநாகைக்காரோணம்	சுந்தரவிடங்கர்	பாராவாரதரங்க நடனம் வீசிநடனம்
திருக்காராயில் (திருக்காறைவாசல்)	ஆதிவிடங்கர்	குக்குட நடனம்
திருக்கோளிலி	அவனிவிடங்கர்	பிருங்க நடனம்
திருவாய்மூர்	நீலவிடங்கர்	கமல நடனம்
திருமறைக்காடு	புவனிவிடங்கர்	ஹம்ஸ பாத நடனம்

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விளங்குகிறது.) இவன் எண்பத்தேழு ஆண்டுகள் ஆட்சி செய்தான். இறுதியில் இறைவன் திருவடி நிழலைப் பெற்றான்.

பத்தாவது அத்தியாயம்

சூத முனிவர் கூறுகிறார் :

வீரசோழனுடைய மகன் கரிகாலன் இவன் தனது முன்னோர்களைப் போலவே நீதிநெறிப்படி ஆட்சிசெய்தான். பெரும் சிவபக்தரான "ஹரதத்த சிவாச்சாரியாரைத் தனது குருவாகப்பெற்று அவர் சொற்படி கஞ்சனூரில் உள்ள அக்னீஸ்வரர் ஆலயத்தை எடுப்பித்தான். இதைப் போலவே துர்கேஸ்வரம், மங்களேசம், ஆம்ரவனம் என்கிற திரு உசாத்தானம் முதலிய ஊர்களில் ஆலயங்களை எடுத்தான். ஆயினும் முன் வினைப் பயனால் கருங்குஷ்டம் இவனைப் பீடித்தது. இதனால் இவன் இரவு பகலாக மிகவும் துன்பப் பட்டான். தனது குருவான ஹரதத்தா சாரியாரிடம் சென்று "ஸ்வாமி! மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நாடு. செல்வம். ஆகியவற்றால் எனக்குச் சிறிதும் மகிழ்ச்சியேற்படவில்லை. நீதிநெறிப்படி நாட்டை ஆட்சி செய்கின்றேன். அந்தணர்களுக்குரிய அக்ரஹாரங்கள் பல அமைத்துக் கொடுத்தேன். பல அறச்சாலைகளை ஏற்படுத்தியுள்ளேன். பல சிவாலயங்களை எடுப்பித்துள்ளேன், பதினாறு வகை தானங்களான கோதானம், பூதானம், கன்யாதானம் முதலியவைகளைக் கொடுத்துள்ளேன். இவ்வளவு செய்தும் எனது உடலைப் பீடித்துள்ள குஷ்ட நோய் மட்டும் இன்னும் குணமாகவில்லை. எனது துன்பம் நீங்கும் வழியும் புலப்படவில்லை. தாங்கள் சிவனடியார். தங்களைச் சரணடைந்தேன். எனது துன்பத்தை நீக்கியருள வேண்டும்." என்று முறையிட்டான்.

இதைக் கேட்ட ஹரதத்தர் "மன்னா! உனது மனக்குறை குறித்துச் சிவபெருமானிடம் முறையிடுகிறேன். கவலற்க! ஒரு மண்டல காலம் பொறு!" என்று ஆறுதல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறி கஞ்சனூருக்குச் சிவிகையில் புறப்பட்டார். அதிகாலையில் கங்கையினும் புநித காவிரியில் நீராடி, விபூதி ருத்ராக்ஷம் தரித்துச் சிவாலயம் சென்றார். உப்பில்லா உணவுண்டு. விரதமியற்றி பஞ்சாக்ஷர ஜபம் கோடிக் கணக்காகச் செய்தார். ஆதிசைவகுலத் தோன்றல் சிவகாம முறைப்படி பட்டு வஸ்திரத்தால் போர்த்தப்பட்ட தங்கக் குடத்தில் காவிரி நன்னீரை நிறப்பி (சுகந்த) நறுமணப் பொடிகளைத் தூவி நூற்றெட்டு மறைவல்லோரை அழைப்பித்து அவர்களைக் கொண்டு முப்பொழுதும் இடைவிடாது 'ஏகாதசருத்ர' ஜபம் செய்யச்செய்து அதனால் அக்னீஸ்வரப் பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்தார். தோத்தரித்தார் இங்ஙனம் ஒரு மண்டல காலம் ஆலயத்திலேயே வாசம் செய்து சிவபெருமானை ஆராதித்து வழிபட்டார்.

பதினோருவது அத்தியாயம்

ஒருநாள் ஹரதத்தரின் கனவில் சிவபெருமான் தோன்றினார். அன்பனே! உனது தவத்திற்கு நான் மகிழ்கிறேன். மன்னன் கரிகாலனிடம் நான் கூறியதாக கீழே காணும் செய்திகளைக் கூறுக என்று பணித்தருளினார்.

மன்னன் கரிகாலன் முற்பிறப்பில் காளஹஸ்தியில் ஒரு வேடனாகப் பிறந்தவன். சிவராத்திரி தினத்தன்று என்னை தரிசித்து வணங்கியதால் இப்பிறப்பில் அரசனாகப் பிறந்துள்ளான். கொலை முதலிய கொடுந்துன்பமிழைத்த குற்றத்திற்காக இப்பிறப்பில் இவனுக்குக் கருங்குஷ்டம் பீடித்துள்ளது.

முன்பு ஒரு சமயம் கரன் என்னும் அசுரன் தண்டகாரண்யத்தில் வசித்துவந்தான். அவனும் இவனைப் போலவே குஷ்டத்தால் துன்புற்று வந்தான். பராசர வனத்தில் சுயம்புவான லிங்கத்தை (என்னை) பூஜித்து, துன்பம் நீங்கினான். அந்த சுயம்பூ லிங்கமும், தடாகமும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சபுரீஸ்வரர் ஆலயத்திற்கு தென்மேற்கிலும், கரதலேஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கிலும் இருக்கின்றன. புண்ணியம் மிகுந்த அந்த தீர்த்தத்திற்கு "சிவகங்கா" என்று பெயர். இந்தப் பொய்கையில் நீராடினால் நீராடியவன் செய்த அனைத்துப் பாவங்களையும் களைகிறான். கொங்கணேஸ்வரரின் ஆலயத்திற்குத் தெற்கில் "சக்திகூபம்" என்ற பெயரில் ஒரு கிணறு இருக்கிறது. அக்கிணற்றுக்கு மேற்குத்திசையில் கந்தப்பெருமானுடைய ஆலயம் இருக்கிறது. (இவ்வாலயம் இன்றும் காணப்படுகிறது) கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று இந்த கந்தனை தரிசித்தால் மிகுந்த புண்ணியம் பெறலாம். (தற்போதுள்ள கொங்கணேஸ்வரர் ஆலயத்தில்) அங்கு கரனால் பூஜிக்கப்பெற்ற லிங்கங்கள் ராசிகளின் அமைப்பில் சக்தி கூபத்திற்குத் தெற்கில் காணப்படுகின்றன.

ஸ்ரீகரதலேஸ்வரர் ஆலயத்திற்கு வடக்குத் திசையில் நிர்விக்ன நிமித்தமாக துந்தில விக்னேசர் (தொப்புள் பிள்ளையார்) ஆலயத்தை முதலில் நிர்மாணம் செய்விக்க வேண்டும். அதன்பிறகு "தேவர்களால் தோண்டப்பட்ட நிலப்பகுதி இது" என்று சிற்ப வல்லுனர் கூறுகின்ற இந்த நிலப்பகுதியில் மன்னன் கரிகாலனைக் கொண்டு உயர்ந்த கோபுரம் கட்டுவிக்கச் செய்வாயாக கணபதி, முருகன், தேவி ஆகியவர்களுக்கு மூலபீடம், பிரகாரங்கள் முதலியவைகளையும். தலைவாயில் உயர்ந்த இரண்டு கோபுரங்களையும் கட்டுவிக்கச் செய்வாயாக. இவ் வாலயத்தின் கர்பக்கிருஹத்தில் பிரதிஷ்டை செய்யும் லிங்கத்திற்காக அரசனை நர்மதை நதிக்கு நீ அழைத்துச் செல். அங்குள்ள ஓங்கார குண்டத்தில் பக்திஸ்ரத்தையுடன் ஸ்நானம் செய்யும்போது இரண்டு பாணலிங்கங்கள் மன்னன் கையில் அகப்படும். அவன் அந்த பாணலிங்கங்களைக் கையில் எடுத்த உடன் அந்த பாணங்கள் இரண்டும் ஒன்றாகிவிடும். அதை நர்மதையின் நீரிலேயே போட்டு விடவேண்டும். மீண்டும் ஒரு பாணலிங்கம் மன்னன் கையில் கிட்டும். மூன்றாவதாக கிடைக்கும் பாணலிங்கம் மிக உத்தமமானது. மிகச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிறிதாக (சூக்ஷ்மமாக) இருக்கும். கரைக்கு எடுத்து வந்ததும் அந்த சிறிய பாணலிங்கம் பெரியதாக வளரும். அதன் பெயர்தான் "பிருகதீஸ்வரர்" என்று "ஸ்ரீருத்ரம்" அழைக்கிறது. இதனை எடுத்துக்கொண்டு வருவதற்கு வியாபாரிகள் வருவார்கள். அவர்கள் பிரஹதீஸ்வரரை வழிபடுவார்கள். சக்ரம், யந்திரம் முதலியவற்றுடனும் புஷ்யமண்டபம் முதலியவற்றுடனும் ஆலயத்தை நிருமாணித்து வழிபட வேண்டும். ஆதி சைவகுலத்தில் தோன்றிய சிவசேகரனின் முன்னோர்களை திருவையாற்றிலிருந்து வரவழைத்து அவர்களைக்கொண்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டு பூஜிக்க வேண்டும். அப்போது நான் பாதாள மூலாந்தம் அந்த பாணலிங்கத்தில் பிரவேசிப்பேன். என்னை தரிசனம் செய்பவர்களுக்கு விசேஷமான பலன் கிடைக்கும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருஷார்த்தங்களைக் கொடுப்பேன். சிவகங்கையில் நீராடி, பெருவுடையாரை தரிசனம் செய்து தூப, தீப, வில்வம் சாற்றினுல் எண்ணுவார் எண்ணியது (மனோபீஷ்டங்களை) ஈவேன். இதைப் போலவே பிருஹன்நாயகிக்கும் ஆலயம் எடுப்பாயாக. எனக்கு முன் நந்திகேஸ்வரனையும் மிக உயரமாகச் சமைப்பாயாக. அந்த நந்திக்குத் தென்மேற்குத் திசையில் மற்ருெரு நந்தியையும் அமைப்பாயாக. பெருவுடையாருக்குத் தெற்கே அகோரமூர்த்தி ஜ்வரஹரேஸ்வரரையும் முறைப்படி ஸ்தாபிப்பாயாக. பக்ஷ்ய போஜ்யங்களுடன் பூஜைகள் செய்துவரவேண்டும். இவ்வாலயத்தை கட்டுவிப்பதற்காக சிற்பச் சக்கரவர்த்தியாக காஞ்சியில் வாழ்ந்துவரும் ஸோமவர்மா என்பவரை அழைப்பாயாக. இந்தச் சிற்பி காஞ்சி ஏகாம்பரர் ஆலயத்தைக் கட்டியவன். அங்குள்ள சிற்பிகளையும், அந்தணர்களையும் அழைத்து தக்க மரியாதை செய்து பொருள் கொடுத்து மேலே கூறிய வண்ணம் ஆலயத்தை கரிகாலன் கட்டினுல் அவனுடைய குஷ்ட நோய் விலகும்" என்று கூறிய சிவபெருமான் மறைந்தார். ஹரதத்தர் தான் கண்ட அற்புதக் கனவைக் கண்டு மனம் மகிழ்ந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பன்னிரண்டாவது அத்தியாயம்

சூதமுனிவர் கூறினர் ;—

ஹரதத்தர் அதிகாலையிலேயே எழுந்து கங்கையினும் புனிதமான காவிரியில் நீராடி, அக்னீசப் பெருமானைத் தொழுது அந்தணர்களுக்கு அன்னமளித்தார். இறைவனின் பிரஸாதங்களை எடுத்துக்கொண்டு மன்னனை சந்திக்க, சிவிகையில் ஏறித் தலைநகரை நோக்கிப் பயணமானர். தலைநகரின் எல்லையிலிருந்த பட்டீச்சரத்திற்கு (பழையாறை) அருகில் வரும்போதே ஒற்றர்கள் மூலம் ஹரதத்தர் வரும் செய்தியை அறிந்த மன்னன், மந்திரிகள், சேனுபதிகள் புடைசூழ ஹரதத்தரைப் பணிந்து எதிர்கொண்டழைத்து வரவேற்றான். ஹரதத்தரை உயர்ந்த சிம்மானத்தில் அமரச் செய்தான்.

ஸ்வாமி! தங்கள் வரவால் நான் தன்யனுனேன். தங்களது தரிசனத்தால் சாக்ஷாத் சிவபெருமானையே காண்பது போல் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். தாங்கள் எனக்கு இடும்பணி எதுவாயினும் சிவபெருமான் இட்டபணியாகக் கருதுகிறேன். தங்களுடைய கட்டளையைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். பணித்தருளுங்கள் என்முன் மன்னன். இதைக்கேட்ட ஹரதத்தரின் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் மலர்ந்தது. "நல்லது" என்று கூறிய ஹரதத்தர் அக்னீசப் பெருமானுடைய பிரஸாதங்களை மன்னனுக்கும், மந்திரிப் பிரதானிகளுக்கும் அளித்தார். மன்னன் கரிகாலன் விபூதியை நெற்றியில் அணிந்துகொண்டான், மந்திரி பிரதானிகள் புடைசூழ அமர்ந்திருந்த மன்னன் கரிகாலனிடம் ஹரதத்தர் தனது நோக்கத்தையும், தான் கண்ட கனவைப் பற்றியும் கூறலானர்,

மன்னு! உன் பொருட்டு ஒருமண்டல காலம் அகனீஸ்வரப் பெருமானை ஆராதித்தேன். இதனல் மகிழ்ந்த சிவபெருமான் விரதகாலத்தின் இறுதியில் ஒருநாள் எனது கனவில் தோன்றினர். அவர் கூறியதின் கருத்தாவது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மன்னன் கரிகாலனுடைய குஷ்டநோய் விலக வேண்டுமாயின் சமீவனத்தில் உள்ள ஸ்ரீ தஞ்சபுரீஸ்வரருடைய ஆலயத்திற்குத் தெற்கேயும், ஸ்ரீ கரதலேஸ்வரருடைய ஆலயத்திற்கு மேற்கேயும் உயர்ந்த கோபுரம் ஒன்றை நீ கட்டுவிக்க வேண்டும். அந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக நர்மதை நதியிலிருந்து பாணலிங்கத்தை எடுத்துவர வேண்டும். அந்த பாணத்தை நல்ல நாளில் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

மேலும், அங்கு 'சிவகங்கை' என்ற புனித நீர்த்தடாகம் ஒன்றுள்ளது, அதற்குத் தெற்கே கரனல் பூசித்தலிங்கம் ஒன்று இன்றும் காணக்கிடைக்கின்றது. காவிரியின் தென் கரையில் 'விண்ணாறு' என்ற ஒரு ஆறு ஓடிக் கொண்டு இருக்கிறது. அந்த ஆற்றுக்குத் தெற்கே மணிமுத்தாநதியென்றும் (வடவாறு) ஓடுகின்றது. இந்த நதியில் நீராடினல் மஹா பாபங்கள் தொலைகின்றன. இந்த நதியிலிடும் மனித எலும்புகள் நீராகக் கரைந்துவிடும். வைகாசி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி, ஆகிய மாதங்களில் நீராடி ஐந்து சிவாலயங்களையும் தரிசனம் செய்கின்றவர்கள் கைலாய பதவியை அடைகின்றனர். அங்க பிரதக்ஷிணத்தால் மஹா பாபங்கள் தொலைகின்றன. தொப்புள் பிள்ளையார், முருகப் பெருமான், மற்றும் க்ஷேத்திர தேவதைகளாக நீலமேகப் பெருமான், ந்ருஸிம்ம மூர்த்தி, வெப்பு நோய்களை அழிக்கும் மாரியம்மன், மற்றும் விஜயா, ஏகவீரா, ரேணுகா, காளி, மார்த்தினி, கோடியம்மன் ஆகிய தேவதைகளை ச்ரவண நட்சத்திரத்துடன் கூடிய ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் பூஜித்தால் பூஜித்தவருக்கு இன்பங்கள் உண்டாகும். இந்த க்ஷேத்திரத்தைப் பிரதக்ஷிணம் செய்தால் அனைத்துப் பாவங்களும் அழியும்'' என்று மன்னனிடம் தான் கண்டகனவையும், திருத்தலப் பெருமையையும் கூறினர். ஆகவே மன்னு! நீ விரைவில் காஞ்சியில் புகழ் பெற்று விளங்கும் சிற்பியை அழைத்து உயர்ந்த கோபுரத்தை எடுப்பாயாக. அதில் நர்மதையிலிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எடுத்துவந்த பாணலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து உனது நோயிலிருந்து நீ விடுதலை பெறுவாயாக. இதை இறைவனுடைய கட்டளையாக ஏற்று, உனது மந்திரிகளின் ஆலோசனைகளைப் பெற்று விரைவில் ஆலயத் திருப்பணியைத்தொடங்குவாயாக!'' என்று ஹரதத்த சிவாச்சாரியார் மன்னனிடம் கூறிமுடித்தார்.

பதின்மூன்றும் அத்தியாயம்

தனது குருவான ஹரதத்தர் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த மன்னன்,

குருதேவா! சிவனடியாராகிய தாங்கள் கூறியபடியே செய்கிறேன். சுபமான முகூர்த்தமும், லக்னமும் கூடிய தினத்தில் தங்களுடன் நான் நர்மதைக்குச் சென்று லிங்கம் எடுத்துவர ஏற்பாடுகளைச் செய்கிறேன். இவ்விதமே காஞ்சியிலிருக்கும் சிற்பியையும் வரவழைத்துக் கோயிலெடுக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்கிறேன்'', என்று மன்னன் கரிகாலன் கூறியதும் சூழ்ந்திருந்த மந்திரிப் பிரதானிகள் மன்னனைப் பாராட்டினார்கள்.

'மன்னனே! சிவனடியார் கூற சிவத் தொண்டை மேற்கொள்ளும் உங்கள் புகழ் மலைகளும், நதிகளும், சந்திர சூரியர் உள்ள நாள்வரையும் நிலைத்து நிற்கும். சிவாலயம் எடுப்பித்து இறுதியில் சிவப் பேற்றையும் அடைவாயாக இன்றே நன்னாள். இப்போழ்தே நல்ல முகூர்த்தம். உங்கள் பணிகளைத் தொடங்குவீர்களாக, என்று மத்திரிகள் கூறியதும், காஞ்சியில் வாழும் சிற்பி சோமவர்மனை அழைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யக் கட்டளை பிறப்பித்தான் மன்னன்.

ஆயிரக் கணக்கான சிற்பிகள் அழைக்கப் பெற்றனர். ஒரு நல்ல முகூர்த்தத்தில் தொப்புள் பிள்ளையாரை மன்னன் வணங்கி பூஜித்து ஆலயம் எழுப்பும் நிலப்பகுதியைத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தோண்ட உத்திரவிட்டான். கோயிற் திருப்பணி துவங்கியது மன்னன், சிற்பி சோமவர்மாவை அழைத்து அவனுக்குப் பட்டாடைகளையும், பற்பல பரிசில்களையும் வழங்கினான்.

"சிற்பியே! சிவ பெருமானுடைய உத்திரவின்படி சிவத் தொண்டிலீடுபட்டு உயர்ந்த நெடுங் கோபுரம் எழுப்ப முனைந்திருக்கிறேன். எனக்கு நீ உதவி செய்வாயாக. சிற்ப நூலில் கூறப்பட்டுள்ளவாறு நீ கோவிலெடுக்கலாம். உனக்கும், உனது பணிக்கும் எவ்வளவு பொருள் தேவைப் பட்டாலும் அவற்றை நான் அளிக்கிறேன். சிவத்தொண்டுக்கு எனது உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்" என்று மன்னன் கூறியதும் சிற்பச் சக்ரவர்த்தி சோமவர்மா மிகவும் மகிழ்ந்தான். தொப்புள்பிள்ளையார் ஆலயத்திற்கு மேற்கே தனது இஷ்டதெய்வமும், தங்கள் குலதெய்வமு மான காளியம்மனுக்கு ஒரு ஆலயம் எடுப்பித்து "காளியம் மனை, அதில் பிரதிஷ்டை செய்து பூஜித்தான். பஞ்சாமிருதம் முதலியவற்றால் நீராட்டி, தூப திபங்களுடன் தோத்தரித்து வழிப்பட்டான் சோமவர்மன்.

"தேவி! இந்த க்ஷேத்திரத்தில் நீ என்றும் நிலைத் திருந்து, இங்கு வாழும் மக்களின் இடர்களைக் களைவாயாக. அவர்கள் விரும்பியாங்கு அருள்புரிவாயாக. உனக்கு எடுக்கும் திருவிழாவிற்குப் பிறகுதான் பிருஹதீஸ்வரருக் குத் திருவிழா நடைபெறும். இதனால் நீ மகிழ்ந்து என்றும் மக்கள் சமுதாயத்திற்கு அருள்புரிவாயாக!" என்று வேண்டி வழிபட்டான்,

காளி மகிழ்ந்தாள், 'சிற்பியே! மன்னனின் விருப்பப் படியே நீ பிருஹதீஸ்வரருக்கு ஆலயம் எடுப்பாயாக. இந்த ஆலயத்தை எந்த சிற்பி எடுத்தான்?" என்று மற்ற சிற்பி களும் வியக்கும் வண்ணம் அமையும். இதில் சிறிதும் ஐயமில்லை. நான் இந்த க்ஷேத்திரத்திலேயே வஸித்து சிற்பிகளுக்கு (கை வினைஞர்களுக்கு) அருள்புரிவேன். வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் என்னை பூஜிப்பவர் களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவேன்"என்று கூறிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவி காளியம்மன் மறைந்தருளினுள். இதைக்கேட்டு, சிற்பச் சக்ரவர்த்தி சோமவர்மா மகிழ்ந்தான். வடக்குப் பார்த்த சந்நிதியிலிருந்து கொண்டு காளிகாதேவி மக்களுக்கு அருள்பாலித்து வருகிருள். இன்றும் இத் தேவியை சிற்பிகள் (கைவினைஞர்கள்) ஆராதித்துக் கொண்டு வருகின்றனர்.

பதினான்காவது அத்தியாயம்

மன்னன் கரிகாலன் தனது கருவூலத்தைப் பொருள்களாலும், தானியங்களாலும் நிரப்பினுன். ஒவ்வொரு சாலைகளிலும் தண்ணீர்ப் பந்தல்களையும், அன்னச்சாலைகளையும் ஏற்பாடு செய்தான். பெரும் பெரும் பாறைகளை எடுத்துவருவதற்காக எருமைகள் பூட்டிய உயர்ந்த வண்டிகளை அமைத்தான். பல கூலியாட்களும், சிற்பிகளும் வந்து கூடினர். வண்டிப் பாதைகளை நன்கு பராமரிக்க ஒற்றர்களையும் ஏற்பாடு செய்து உரிய அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கினுன். பலமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டதைக் கண்டு சிற்பி சோமவர்மா மனமகிழ்ந்தான். ஒவ்வொருவருக்கும் பணிகள் வகுக்கப்பட்டன. குன்றுகள் பிளக்கப்பட்டன. எங்கும் சிற்றுளிகளின் ஒலி பேரொலியாக ஒலித்தன.

சிற்பிகளிடம் மன்னன் கரிகாலன் வேண்டுகோள் விடுத்தான். "சிவபெருமானுடைய ஆணையின்படி நான் சிவத்தொண்டு செய்ய விரும்புகிறேன். பெருஞ்சிற்பியான சோமவர்மாவுடன், நீங்கள் சிற்பநூலில் கூறிய வண்ணம் சிற்பங்களைச் செதுக்குங்கள். உங்களுக்குத் தேவையான பொருட்களை மந்திரிகளிடம் தெரிவித்தால் அவர்கள் உங்களுக்கு அளிப்பார்கள். நானும், எனது குருவும் நர்மதை நதிக்குச் சென்று லிங்கத்தை எடுத்து வருவதற்காக நாளை அதிகாலையில் புறப்படுகிருேம். ஆகவே நீங்கள் கோயில் திருப்பணியில் சோமவர்மனுடன் பங்கேற்று திருப்பணியை நிறைவு செய்வீர்களாக" என்முன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருகிலிருந்த மந்திரிகள் மன்னா! தாங்கள் கட்டளையிட்டவாறே செய்கிறோம். இன்று அதிகாலை எம்பெருமானைக் கனவில் கண்டோம். அப்போது "நீங்கள் அறுபத்து நான்கு வகை வியாபாரமடங்கிய வியாபாரிகளுடன் நர்மதை நதிக்குச் சென்று இலிங்கப் பெருமானை எடுத்து வரும்படிக் கூறினர்." என்று மந்திரிகள் கூறியதும் அந்த வியாபாரிகள் அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான பொருள் அளிக்கப்பட்டன. அவர்களும் தொப்புள் பிள்ளையாரை வணங்கி வேண்டிக்கொண்டனர். அவர்களுடைய வேண்டுதலுக்குச் செவி சாய்த்த விநாயகப் பெருமான் தான் தெற்குமுகமாக எழுந்தருளியுள்ள கோலத்தை மாற்றி மேற்கு முகமாகத் திரும்பி அருள்புரிந்தார்,

மன்னன், தனது குருவான ஹரதத்தர், மற்றும் வணிகர்களுடன் நர்மதை நதியை அடைந்தான். அங்குள்ள ஓங்கார குண்டத்தில் நர்மதை நதியில் நீராடினன். நீரில் மூழ்கி எழுந்ததும் இரண்டு பாணங்கள் கிடைத்தன. அவற்றை நீரிலேயே விடுத்தான். மூன்றுவதாகக்கிடைத்த 'பாண' த்தை நதியின் கரையில் வைத்துப் பூஜித்தான். அதைக்கண்டு மன்னனும், ஹரதத்தரும் பெருமகிழ்ச்சி கொண்டனர். ரதத்தில் மலர் மண்டபம் அமைத்து அதில் அந்த பாணலிங்கத்தை எழுந்தருளுவித்தனர். பலவித வாத்தியங்களின் பேரொலியும், அந்தணப் பெருமக்களின் வேதவொலியும் சேர்ந்து முழங்கின. நர்மதை நதியிலிருந்து ரதத்தின் மூலமாக புறப்பட்ட பாணலிங்கம் ஸமீவனத்தை அடைய (தஞ்சாவூரை அடைய) ஆறு மாதங்கள் உருண்டோடின. தஞ்சபுரீஸ்வரர் ஆலயத்திற்கு முன்னுல் இந்த பாணலிங்கத்தை (பாலாலயமாக) ஸ்தாபித்து தூப, தீபங்களுடன் ஆதிசைவ அந்தணர்கள் மூன்று வேளைகளிலும் ஆராதித்து வந்தனர். உடன் வந்த வணிகர்கள் தன-தான்யங்களால் வழிபட்டனர். குருவான ஹரதத்தர், அரசன், அரசி ஆகியோர் பெருமகிழ்ச்சியுடன் நகருக்குத் திரும்பினர். நெடுங்கோபுரம் எடுக்கும்வரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தஞ்சபுரீஸ்வரர் ஆலயத்திலேயே (பாலாலயமாக ஸ்தாபனம் செய்து) ஆராதித்து வந்தனர்.

பதினைந்தாவது அத்தியாயம்

சிற்பி சோமவர்மாவுடன், ஆயிரக்கணக்கான சிற்பிகள் பன்னிரண்டு ஆண்டுகளாக உழைத்து பல சிற்பங்களையும், உயர்ந்த கோபுரத்தையும் அதற்கு எதிரில் மிகவுயர்ந்த நந்திகேஸ்வரரையும், வெளிப்புறத்தில் இரண்டு கோபுரங்களையும் கட்டிக்கொண்டு இருந்தனர். ஆலயம் சிற்பநூலில் கூறப்பட்ட வண்ணம் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது மன்னன் கரிகாலன் காஞ்சியிலிருந்த சோமவர்மாவை மன்னன் அழைத்த சமயம் அவனுடைய மனைவி கருவுற்றிருந்தாள். சோமவர்மா தஞ்சைக்கு வந்தபிறகு அவனது துணைவி ஒரு அழகிய ஆண்குழந்தையை யீன்றெடுத்தாள். குழந்தை வளர்ந்து வந்தான், ஆண்டுகள் மறைந்தன. பன்னிரண்டு வயதுச் சிறுவனாக வளர்ந்து நின்றான். சிற்ப நூல்களைப் பயின்று தனது தந்தையைப் போலவே சிறந்த சிற்பியாக ஆகவிரும்பினான், சிறுவன். சிற்றுளியால் கற்களைச் செதுக்கத் தொடங்கினான்.

ஒருநாள், தனது தாயை வணங்கி, "அம்மா! எனது தந்தை எங்கே இருக்கிறார்? அவரைக்காண விரும்புகிறேன்". என்றான். தாயார் அவனை அன்புடன் அணைத்துக்கொண்டு "குழந்தாய்! உனது தந்தை சோழமன்னனின் அழைப்பையேற்று, தஞ்சை நகரில் மிகயுயர்ந்த கோபுரம் எழுப்புவதற்காக தஞ்சாவூர் சென்று இருக்கிறார். அவர் இப்போது அங்கு கோவில் கட்டும்பணியில் ஈடுபட்டிருக்கிறார். நீ அங்கு சென்று உனது தந்தையைக் காண்பாயாக. மேலும் நீ விரும்பும் பொருளையும் மன்னனிடமிருந்து பெற்றுக்கொள்" என்று தாய்கூறியதும் அந்தச் சிறுவன் தனது தாயை வணங்கி, "தந்தையைக் கண்டு, அவர்கள் செய்துவரும் சிற்பங்களையும், அவற்றைச் செய்யும் அமைப்பையும் காண

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விரும்புகிறேன்". என்று தன் தாயிடம் கூறி விடைபெற்றுக் கொண்டான். தஞ்சைக்குப் பயணமானான். காஞ்சியிலிருந்து புறப்பட்ட பத்து தினங்களில் தஞ்சையை வந்தடைந்தான். கோபுரத்தின் அமைப்பைக் கண்டு, அது அமைந்துள்ள நிலையைக் கணக்கிட்டான் சிறுவன். அங்கு சிற்பிகளின் பணியைக் கவனமாகக் கண்டுகொண்டிருக்கும் மன்னனிடமும், மந்திரியிடமும், சிறுவன் சென்றான். சென்று, இந்த அமைப்பில் கோபுரம் கட்டப்படுமானால் பெருங்காற்றினாலும், மழையினாலும் அடிக்கடி இந்தக் கோபுரம் விழுந்து அழியும் "இதை அமைத்த திறமையற்ற சிற்பி யார்?" என்றான் இளஞ் சிற்பி. இதை செவியுற்ற மன்னனும், மந்திரியும் உடனே அச்சிறுவனை அருகில் அழைத்தனர்.

சிறுவனே! நீயார்? எங்கிருந்து வருகிறாய்? இக்கோபுரம் உறுதியாகவும், நிலைத்தும் இருக்க வேண்டுமாயின் இதை எப்படி அமைக்கலாம்? எப்படி அமைக்க வேண்டும்?" என்று கேட்டான்.

மன்னா! இக் கோபுரத்தின் உள்ளளவு சரியாகக் கணக்கிடப் படுமானால் இக்கோபுரம் உறுதியாக நிலைபெற்று நிற்கும்" என்று சிறுவன் கூறியதும் மன்னன் மகிழ்ந்தான்.

மற்ற சிற்பிகளின் மூலம் இந்தச் செய்திகளை அறிந்த சேமவர்மா உணவில் விஷம் கலக்கச் செய்தான். இதை அச் சிறுவன் அருந்த வேண்டும். சீக்கிரமாக அவனை அழைத்து வாருங்கள் என்று உத்திரவிட்டான்.

அரண்மனை வாயிலில் தனித்து நின்ற அச் சிறுவனிடம் சென்று ஏனைய சிற்பிகள் நீயார்? எங்கிருந்து இங்கு வந்தாய்? என்று திரும்பத் திரும்ப கேட்டனர்.

சிறுவன், சோவர்மனுக்கு அருகில் அழைத்து வரப் பட்டான். தன்னருகில் கொண்டுவரப்பட்ட சிறுவனைத் தலைமைச்சிற்பி சோமவர்மா கண்டான். 'முகத்தில் கலையின் பொலிவு, ஆண்மை நிறைந்த தோற்றம், சிற்றுளி பிடிக்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏற்ற கைகள், இடையில் ஆடையை கச்சமாக அணிந் திருக்கும் பாங்கு, இவற்றுடன் தோற்றமளிக்கும் சிறுவனைக் கண்டதும் பொங்கி எழுந்த சினத்தை உள்ளடக்கிக் கொண்டு,

"சிறுவனே! நீயார்! எங்கிருந்து வருகிறாய்? இங்கு உணவருந்தி முதலில் ஓய்வுகொள் என்று கூறியதைக் கேட்ட சிறுவன் இரு கரங்களைக் குவித்துக் கொண்டு "ஐயா! அரசனுடைய கருவூலத்திலிருந்து பெரும் பொருள் செலவழித்து நிர்மாணிக்கும் இந்த நெடிதுயர்ந்த கோபுரம் நீண்ட ஆண்டுகள் நிலைத்துநிற்காது" என்றான்.

இதைக் கேட்ட சோமவர்மன்" அப்படியா! இந்த கோபுரம் நீண்ட காலம் நிலைத்திருக்க நான் என்ன செய்ய வேண்டும்? உன்னைப்பார்த்தால் சிறுவனாகத் தோற்றமளிக் கிறாய். ஆனால் நீ சிற்ப நூலை நன்குணர்ந்து இருக்கிறாய் போலும்! நானோ மிகவும் உடல் தளர்ந்துள்ள மூப்பாளன். உண்மையில் எனக்கு விரல் பிரமாண அளவு கூடத் தெரிய வில்லை. நீ எனக்குக் கற்றுக்கொடுப்பாயா?" என்றான். பரிகாசமாக.

இதை, செவியுற்ற சிறுவன், ஐயா! உங்களுக்கும் எனக்கும் இச் செய்தி தெரியும். ஆயினும் கூறுகிறேன். கோபுரத்தின் உள்ளளவாகக் கொண்டு கணக்கிடப்படல் வேண்டும். சுற்றளவு இருபது விரலுக்கு உட்படாத அள வாகக் கொண்டு (இது பற்றியளவு முறையை சிற்ப நூலில் கண்டு கொள்க.) அமைக்கப்படுமானால் பல்லாண்டுகள் நிலைத்து நிற்கும். மன்னனின் முயற்சியும் வெற்றியடையும். அவனுக்கு உதவினால் எம்பெருமான் மகிழ்வார், எனக்கும் கைலாசவாசம் கிடைக்கும் என்பதால் நான் இதைக் கூறினேன்", என்றான் சிறுவன். இதைக் கேட்டதும் சோம வர்மா, சிற்பிகளை அழைத்தான் சிறுவனையும் சேர்த்துக் கொண்டு ஒரு குழுவாக அமர்ந்து கணக்கிட்டனர். கணக் கிட்டு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு மீண்டும் பணி தொடங்கப்பட்டது. நூல்கொண்டு அளந்தனர். மஞ்சள்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூதமுனிவர் கூறினர் ;—

சிவபக்தியிலீடுபட்ட ஒரு வயதான மூதாட்டி ஆலயத் திருப்பணியிலீடுபட்டுள்ள சிற்பிகளுக்கு உணவு, தாம்பூலம் தண்ணீர் போன்றவைகளைக் கொடுத்து பன்னிரண்டு ஆண்டு காலமாக உபசரித்து வந்தாள் ஒருநாள் அந்த மூதாட்டி "என்னிடம் ஒரு கருங்கல் இருக்கிறது. இதையும் அந்த சிவ கைங்கரியத்தில் முறைப்படி சேர்த்துவிடுங்கள்" என்று சிற்பிகளிடம் கேட்டுக்கொண்டாள்.

அந்த மூதாட்டியின் விருப்பத்தை அறிந்த சிற்பிகள் அந்தக் 'கருங்கல்லை' அழகாகச் செதுக்கி நெடிதுயர்ந்த கோபுரத்தின் 'சிகரத்தின்' மத்தியில் பொருத்தினர். அது சிவபெருமானின் தலையில் விளங்கும் சந்திரனைப் போல் விளங்கியது. பல சிற்பிகளால் பன்னிரண்டு ஆண்டு காலம் இடைவிடா கடினமான உழைப்பின் பயனாக கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. மன்னனும் ஹரதத்தரும் மகிழ்ந்தனர்.

மன்னனின் விருப்பப்படி 64 வகை வியாபாரிகளை அழைத்துவர உத்திரவிட்டனர் அமைச்சர்கள். தஞ்சபுரீஸ்வரர் ஆலயத்தில் 'பாலாலயமாக' வைத்துப் பூஜிக்கப்பட்ட பெருவுடையாரின் பாணலிங்கத்தைத் தேரிலேற்றி வியாபாரிகள் வடம் பிடித்து இழுத்தனர். வாத்தியங்களின் மங்கல ஒலி, மறையோரின் மறையொலி, இசைவாணர்களின் இசையொலி, ஆகிய பல்லொலிகள் எழுப்பிய இன்பமயமான பேரொலி எழுந்தது. நடன மாதர் நடனமாடினர். மக்கள் பூமாரி பொழிந்தனர். பெருவுடையார் எழுந்தருளுவித்த திருத்தேர் ஊர்வலமாகப்பெருங்கோயிலை அடைந்தது. மிகவுயர்ந்த, சிறந்த கர்பகிருஹத்தில் (கருவறை) சுப வேளையில் பெருவுடையாரைப் பொறுத்தி அஷ்டபந்தனம் செய்தனர்.

கோபுரங்களையும், மண்டபங்களையும் கட்டினர். விநாயகர் சந்நிதி, அம்மன் சந்நிதி, சண்டேசர் சந்நிதி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நடராஜப் பெருமானுடைய சிற்றம்பல மண்டபம், முதலியன கட்டி முடிந்தன.

முன்னொரு சமயம் ஒருநாள் மன்னன் ஆலயநிர்மாணத்தைக் காண்பதற்காகத் தனிமையில் விஜயம் செய்தான். சிற்பிகள் தங்களது பணியிலீடுபட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தங்களையே மறந்து தங்களது கலையிலே மூழ்கி பணி செய்து கொண்டிருந்தனர். மன்னன் வந்ததை ஒருவரும் அறிந்திலர். பெரும் சிற்பிகளுக்கு உதவ, பால சிற்பிகள் அவர்களுக்குப் பின்னின்று கொண்டு பணிவிடை செய்வார்கள். அப்போது இளஞ்சிற்பி (சோமவர்மாவின் மகன்) தாம்பூலம் கேட்க, பின்னால் நின்று கொண்டு அவனது கலையிலீடுபட்டிருந்த மன்னனே, அவனுக்குத் தாம்பூலத்தை மடித்துக் கொடுத்தான். மணம் நிறைந்த தாம்பூலத்தைச் சுவைத்த இளஞ்சிற்பி இவ்வளவு மணமும், சுவையுமுடைய தாம்பூலம் கொடுத்தவனைக் காணத் திரும்பினான். அங்கு மன்னன் நின்று கொண்டு தாம்பூலம் கொடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு, பயந்து நடுங்கி தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். "மன்னா! தங்களிடம் நான் செய்த அபராதத்திற்காக, நானே முருகப் பெருமானின் ஆலயத்தை நிர்மாணித்து அதில் எனது திறமையைக் காட்டவேண்டும் என்று விரும்புகிறேன். அனுமதியளியுங்கள்" என்று கேட்டுக் கொண்டான் அந்த இளஞ் சிற்பக் கலைஞன். மன்னனும் மகிழ்ந்து அவனுக்கு அனுமதி அளித்தான். இளஞ்சிற்பி தனது கைவண்ணத்தைக் கல்லில் காட்டி ஒரு 'கலைகற்கோயிலை'யே எழுப்பினான். அதில் கலை நுணுக்கங்கள் பல பொதிந்துள்ள, ஒரே கல்லிலான முருகப்பெருமான் வள்ளி, தேவசேனையுடன் மயிலில் ஆரோகணித்திருக்கும் திருக்கோலத்துடனும், திருவாசியுடனும் செதுக்கிவைத்தான். இதைப்போலவே சோமவர்மா ஒரே கல்லிலான நந்தியெம்பெருமானை வடித்தான். இதைக் காணவந்த மன்னனிடம்,

"மன்னர் பெரும! இப்போது ஒரு வேடிக்கை செய்கிறேன் பாருங்கள்" என்று கூறிய சோமவர்மா இப்பெரிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தியின் வால்பகுதியில் "தேரையொன்று"ள்ளது. என்று கூறி சிற்றுளியால் பலமாகத் தட்டினன். அவ்விடத்தி லிருந்து தேரையொன்று சந்தணப் பூச்சுடனும், (நிறத் துடன்) நீருடனும் வெளிப்பட்டு நடராஜரின் சந்நிதிக்கு மேற்கே தத்திக்கொண்டு விழுந்தது. அவ்விடத்திலுள்ள கிணற்றுக்கு அன்று முதல் 'பேக தீர்த்தம்' என்ற பெயர் உண்டாயிற்று. (பேக: = தவளை, தேரை) தெற்குத்திசை யில் மற்றொரு நந்தியையும், கோபுரத்தின் சிகரத்தில் எட்டு நந்திகளையும் உருவாக்கி வைத்தனர். அகோரமூர்த்தியை யும், மற்றும் இருபத்தைந்து மூர்த்திகளையும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தனர், பெருவுடையாருக்கு ஏற்ப சோமாஸ்கந்தப் பெருமாளை (உத்சவ மூர்த்தியை) உருவாக் கினர். கோவிலின் பிரகாரமதிற்சுவற்றில் அழகு வாய்ந்த நந்திகளை அமைத்தனர். ஆலயம் பூர்த்தியானது.

சிற்பச் சக்ரவர்த்தி சோமவர்மன் மன்னனுச்கு ஒவ்வொன்றையும் காட்டி அவற்றின் நுட்பங்களை விளக் கினன். சிற்ப நுணுக்கங்களைக் கண்டு "கைலையே பூவுல கிற்கு வந்து விட்டதோ" என்று எண்ணி அகமகிழ்ந்தான் மன்னன்.

மன்னன் கரிகாலன் சிற்பி ஸோமவர்மனுக்கு கனகா பிஷேகம் செய்து யானையில் அவனையும், அவனது மகனையும் இருக்கச்செய்து ராஜவீதிகளில் வீதிவலம் வரச்செய்தான். தஞ்சை நகரம் விழாக்கோலம் பூண்டது. பல்வகை வாத்யங்கள் முழங்கின. அனைத்துச் சிற்பிகளுக்கும் கடகம் கேயூரம், மாலை, பட்டாடைகள் முதலியவைகளைக் கொடுத்து மரியாதை செய்தான். பெரும் பொருள் கொடுத்தான். அனைவருக்கும் சிறப்பான விருந்து படைத் தான். "சோழபுரம்" என்ற பெயரில் ஒரு பெருங் கிராமத்தை கலையின் பரிசாக இவர்களுக்கு அளித்தான். சிற்பிகள் மகிழ்ந்தனர், மன்னன் கொடுத்த பொருளைக் கொண்டு காவிரியின் வடகரையில் கைலாசநாதருக்கு இவர்கள் ஒரு பெருங் கோயிலை எடுத்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனது குருவான ஹரதத்தரை முன்னிட்டுக் கொண்டு தேசத்தின் பல இடங்களிலிருந்து சைவாகமத்தில் கரை கண்ட சிவாச்சாரியார்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் கும்பாபிஷேகத்திற்குத் தேவையான அனைத்து ஏற்பாடு களையும் செய்தனர். 'மகுடாகம' முறைப்படி லக்ஷக்கணக் கான வேதியர்கள் யாகசாலையில் உருவான 'யாகவேதிகை' யில் யாகம் செய்தனர். திருவையாற்றிலிருந்து வரவழைக் கப்பெற்ற சிவாச்சாரியார்கள் பெருவுடையாரின் பெருங் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) செய்து முறைப்படி எம்பெருமானை பூஜித்தனர்.

பதினொரும் அத்தியாயம்

சூத முனிவர் கூறுகிறார் :

பெருவுடையாருக்கும். விநாயகப் பெருமான், முருகப் பெருமான், சோமாஸ் கந்தர், சண்டீசர் ஆகியோரின் ஆலய கும்பங்களுக்கு நல்ல சுபமான முகூர்த்தத்தில் குடமுழுக்கு நடைபெற்றது. இந்த குடமுழுக்கிற்குப் பிறகு பெருவுடை யாருக்கு பிர்மாண்டமான அபிஷேகம் நடைபெற்றது. அதில் கீழே காணும் கணக்கில் அபிஷேகப் பொருட்கள் பயன் படுத்தப் பெற்றன.

தங்கக் குடங்கள்—119, சங்குகள்—1000, செப்புக் குடங்களில் புண்ணிய நதிகளின் நீரிட்டு அதில் நவரத்தினங் களிட்டு பஞ்சபல்லவத்தால் (பில்வம், மா, அரசு, ஆல், மகிழம், ஆகியவற்றின் இலைக்கொத்து) அர்ச்சனை செய்த குடங்கள்—1000, பிர்ம கூர்ச்சத்துடன் பஞ்சகவ்ய அபிஷேகம்—100குடங்கள், பசும்பால்-1லட்சம் குடங்கள், நெய்—100 குடங்கள், சர்க்கரை—5 மலைகள், இளநீர்— 2 லட்சம் காய்கள், வாழைப்பழம்—5 லட்சம், மாம்பழங் கள்—1 லட்சம், பலாப்பழம்—1 லட்சம், எலுமிச்சைப் பழம்-10 லட்சம், கரும்புச்சாறு-1000 குடங்கள், நறுமணப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொடி கலந்த நீர்—1000 குடங்கள், சுத்தமான நீர்— 5 லட்சம் குடங்கள். அந்தணர்கள் ஸ்ரீருத்ரத்தை கோஷிக்க அபிஷேகம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஹோமங்கள் நடந்தன. பெருவுடையாருக்கு வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் அணிவித்தனர். இதைப்போலவே பெரிய நாயகி, கணபதி, முருகன், நடேசர் முதலிய மூர்த்திகளுக்கும் அலங்காரங்கள் செய்தனர். லட்சதீபங்கள் (நெய் விளக்குகள்) ஏற்றப் பெற்றன. பக்ஷணங்களும், சித்ரான்னங்களும் மலைகளைப் போல் குவிக்கப்பட்டு நிவேதனம் செய்யப்பெற்றன. துந்துபி போன்ற பல விதமான வாத்தியங்கள் முழங்கின. குடை, சாமரம், கொடி, முதலிய விருதுகள் அலங்காரமாக வைத்தனர். ஆடல் மகளிர் நடனமாடினர். வீணை, குழல், மிருதங்கம், ஜலரின் ஒலிசுநாதமாக எழுந்தன. ஆகம முறைப்படி மஹாபிஷேகம் செய்யப்பட்டது. அறுசுவை விருந்தை ஒரு கோடி அந்தணர்களுக்கு வழங்கினன் மன்னன். இவர்களுக்கு ஆடைகள், உதகபாத்திரங்கள், தக்ஷிணை முதலியவற்றை வழங்கினன். அர்ச்சகர்கள் ஸ்ரீருத்ரஜபம் செய்தவர்கள், உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு வஸ்திரங்கள், ஆபரணங்கள், வாசனை திரவியங்கள் பசு, பூமி, தானியம் முதலியவைகளை வழங்கினன். இதனல் அவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். கும்பாபிஷேகத்தையொட்டி மண்டலாபிஷேகமும் சிறப்பாகக் கொண்டாடினன் மன்னன், முக்காலங்களிலும் லட்சார்ச்சனைகளை செய்யச் செய்தான், இறைவனின் பூஜைக் கட்டளைக்காக சூலமங்கலத்திற்குக் கிழக்கே 10 கிராமங்களை வழங்கினன். இதனை செப்புப் பட்டயத்தில் எழுதிக் கொடுத்தான். நடர்களையும், நடனமாதுக்களையும் நடனத்திற்காக ஏற்பாடு செய்தான். பஞ்சாமிர்த அபிஷேகத்திற்கு 1000 பசுக்களை அளித்தான். அமாவாசை, பௌர்ணமி, ப்ரதோஷம் ஆகிய திதிகளில் இருமுறை பூஜை செய்ய தனியாக கட்டளை ஏற்பாடு செய்தான்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதினேழாவது அத்தியாயம்

சூத முனிவர் கூறுகிறார் :

சித்திரைப் பெருவிழாவுக்காக கட்டளைகளை ஏற்பாடு செய்தான். கொடியேற்றந் தொடங்கி பதினெட்டு நாட்கள் விழா நடத்த ஏற்பாடு செய்தான். ஏகாதசியன்று ரதோத்சவமும், துவாதசியன்று சிவகங்கையில் தீர்த்தம் கொடுக்கவும் ஏற்பாடு செய்தான். விநாயகர் திருவிழா மூன்று நாட்கள், முருகனுக்கு விழா மூன்று நாட்கள், பின் கல்யாணசுந்தரர் இடபாரூடராய் நான்கு வீதிகளில் ஊர்வலம் வரச்செய்தான். யானை வாகனம், பூதவாகனம் முதலிய வாகனங்களைச் செய்தான். கொடி. மணியுடன் எட்டு சக்கரங்களுடைய உயரமான தேர் செய்துவைத்தான். இதில் பிருகதீஸ்வரர் நகரைப் பவனி வந்தார். பிருகன் நாயகி சமேதராக மற்றொரு ரதத்தில் பவனி வந்து துவாதசியன்று சிவகங்கையில் தீர்த்தம் கொடுத்தருளினார். அனைத்து மக்களுடன் மன்னனும், ஹரதத்தரும் நீரில் மூழ்கி எழுந்தனர். குஷ்டரோகம் நீங்கி சந்திரனைப் போல் ஒளியுடன் திகழ்ந்தான் மன்னன். மனைவியுடன் மூழ்கி நீராடிய மன்னன் பசு, தனம், தானியம் முதலியவைகளை அந்தணர்களுக்கு மிகுந்த பக்தியுடன் தானம் செய்தான். மன்னனுக்கு நேரில் கங்காதேவி தோன்றி நீரிலிருந்து விஸ்வநாதர் என்ற பெயரையுடைய லிங்கத்தை எடுத்துக் கொடுத்தாள். மின்னற்கொடி போன்று சர்வாபரண பூஷிதையாகத் தோன்றிய கங்காதேவி மக்கள் கேட்குமாறு கூறினாள்.

"மன்னா! சிவகங்கை தீர்த்தத்தில் நான் எனது ஒரு அம்சத்துடன் என்றும் இருப்பேன். இதில் நீராடியானிப்பவர் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்று பிருகதீஸ்வரப் பெருமானைக் காண்பர். இறுதியில் கயிலையை அடைவர். சந்திர சூரிய கிரஹணங்களிலும், பௌர்ணமி அமாவாசை, பிரதோஷம், திங்கட்கிழமை மற்றும் புண்ணிய தினங்களில் நீராடினால் கங்கையில் நீராடிய பயனைப் பெறுவர். பிருகதீஸ்வரரை தரிசிப்பவர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காசி விசுவநாதரை தரிசித்த பயனைப் பெறுவர் என்றும், மன்னா! முன்பு கங்கையில் இருந்த இந்த லிங்கத்தை இத் தடாகத்தின் அக்னி மூலையில் (தென்மேற்கு) பிரதிஷ்டை செய்வாயாக. இதனால் இந்தப் பொய்கை 'சிவ-கங்கா' என்று அழைக்கப் பெறும்'' என்றும் கூறி மறைந்தாள். மன்னனும் கங்கை கூறிய வண்ணம் விஸ்வநாத லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். அந்த லிங்கம் இன்றும் சிவ கங்கையில் காணப்படுகிறது.

கங்கையைக் கண்ட மன்னன் ஆச்சரியமடைந்தான், தனது கொடிய குஷ்டநோய் மறைந்ததைக் கண்டு மகிழ்ந்து சாஷ்டாங்கமாக கீழேவிழுந்து நமஸ்கரித்து தோத்தரித்தான். தனது குரு ஹரதத்தரையும், சிவாச்சாரியார்களையும் வணங்கினான். பிரகதீஸ்வரப் பெருமானை பூஜிக்க திருவையாற்றிலிருந்து ஆதிசைவகுலத் தோன்றல்களை வரவழைத்து அவர்கள் குடியிருக்க வீடுகளையும் நல்கினான்.

மன்னன், துயிலும் போழ்து எம்பெருமான் இடபாரூடராய்த் தேவியுடன் காட்சி நல்கினார். 'மன்னா! உன்னால் அளிக்கப்பெற்ற உணவை உண்டு, கிழவியின் நிழலில் உறைந்து வருகிறேன்' என்று கூறி மறைந்தருளினார். தனது குரு ஹரதத்தரிடம் தனது கனவைக் கூறினான் மன்னன்.

சிற்பிகள் அனைவரையும் வரவழைத்தான். சிற்பத் தலைவன் சோமவர்மன் அழைக்கப்பெற்றான். அவனிடம் மன்னன் சோமவர்மனே! நீ எனது பணத்தில் கோவில் கட்டினாயா? அல்லது பிறர் பொருளைக் கொண்டுகட்டினாயா? சிற்பிகளை அழைத்து அவர்களிடம் விசாரித்து எனக்கு உடன் செய்தியை அறிவிப்பாயாக என்றான். சிற்பி சோமவர்மன் அனைத்துச் சிற்பிகளிடமும் தனித்தனியே விசாரித்தான். சூழ்ந்திருந்த சிற்பிகள் அஞ்சினர். 'உணவளித்த ஒரு மூதாட்டியின் விருப்பத்திற்கு இணங்க, அவளால் கொடுக்கப் பெற்ற கல்லை கோபுரத்தின் சிகரத்தில் பொருத்தியிருக்கிறோம்'' என்று சிற்பிகள் கூறினர். சோமவர்மன் இதனை மன்னனிடம் கூறி மன்னிப்பையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோரினன். இறைவனை மகிழ்விக்க எண்ணிய மன்னன் கரிகாலன் நந்தியெம்பெருமானுக்கும், சிவபெருமானுக்கும் இடையில் உண்ணாவிரதம் இருந்து உயிரைத் துறப்பது என்று தீர்மானம் செய்து, தனது மனைவியுடன் தரையில் படுத்து உண்ணா நோன்பு நோற்றான். மூன்று தினங்கள் கழிந்தன. கரிகாலனின் கனவில் தோன்றிய பெருவுடையார் அன்பனே! வருந்தற்க. மூதாட்டி விரும்பும் அளவு அவளுக்குப் பொருள் கொடுப்பாயாக. அவள் மனம் மகிழ்ந்தால் உனது தர்மம் என்றும் நிலைத்து நிற்கும். வானில் சந்திர சூரியர் உள்ளவரை, மண்ணில் மழையுள்ளவரை, உனது முன்னோர்களுடனும், உனது சந்ததியினருடனும் எனது சந்நிதியில் ஸாரூப்யத்துடன் விளங்குவாயாக. முருகன், கணபதி, நந்தி, ஆகியோரைப் போல் நீயும் திகழ்வாய்'' என்று கூறி மறைந்தார்.

அதிகாலையில் கணவு கண்ட மன்னன் தனது குரு ஹரதத்தரிடம் தான்கண்ட கனவைப் பற்றிக் கூறினன். வயதான அந்த மூதாட்டி அழைத்துவரப் பட்டாள். அவளுக்குக் கனகாபிஷேகம் செய்தான் மன்னன். அம்மையே! உனக்கு ஒருலட்சம் பொற்காசுகளை தருகிறேன் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைவாயாக, உனது மகிழ்வே எனது மகிழ்வு என்றான்.

இதைக் கேட்ட அந்த மூதாட்டி மன்னா! இன்றோ, நாளையோ எனது மரணத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இவ்வளவு செல்வத்தால் மட்டும் என்ன பயன்? எனது பெயரால் இந்தப் பொருளைக் கொண்டு கும்பகோணத்துக்கு நிருதிதிக்கில் ஐராவதேஸ்வரருக்கு ஒரு ஆலயம் எழுப்புவாயாக, அப்போது தான் நான் மகிழ்ச்சியடைவேன்'' என்றாள்.

அப்படியே செய்கிறேன் என்று வாக்களித்தான் மன்னன். சிற்பிகளிடம் மூதாட்டி விரும்பியபடி ஆலயம் எடுத்தான். மூதாட்டி மகிழ்ந்தாள். உரிய காலத்தில் சிவப் பேற்றைப் பெற்றாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூத முனிவர் கூறுகிறார் :

கரிகாலன் 90 ஆண்டுகள் ஆட்சிசெய்தான். இவன் தனது மகன் பீமசோழனுக்கு முடி சூட்டி தனது மனைவியுடன் கைலையை அடைந்தான். கைலையில் சிவகணமாக; சிவஸ்வரூபமாக ஆனான். நதிகளும், பொய்கைகளும், கடலும், மலையும் எந்நாள் வரையுள்ளதோ அந்த நாள்வரை இவனது புகழ் நிலைத்து நிற்கும். இவனது புகழை என்றும் பரப்பும் வண்ணம் இவன் எழுப்பிய சுற்றளியில் கல்வெட்டாக வெட்டியுள்ளான். கரிகாலன் சோழர் குலத்து மன்னர்களில் மிகப் புகழ்வாய்ந்த சிவத்தொண்டன். இவன் வரலாற்றைக் கேட்டவர்களின் பாவம் தொலைந்து சிவகணப் பேற்றை அடைந்து வெள்ளி மலையில் வாழ்வர்.

பதினெட்டாவது அத்தியாயம்

கரிகாலனின் மகன் பீமசோழன் சிறப்பாக ஆட்சிசெய்தான். கேரள ராஜகுமாரி(வித்யுல்லதா) மின்னற் கொடியைத் திருமணம் செய்து கொண்டு சிறந்து வாழ்ந்தான். அவள் ரதியைப் போல அழகியாக இருந்தாள். அனைத்துக் குணங்களும் நிறம்பப் பெற்றிருந்தாள். மன்னன் பீம சோழன் தனது பெயருக்கு ஏற்ப வல்லமை பொருந்தியவனாக இருந்தான். அவன் ஆட்சியில் திருட்டு கிடையாது. கொடிய விலங்குகளால் துன்பம் கிடையாது. காலா காலங்களில் மழை பொழிந்தது. சாலைகளின் இருமருங்கிலும் நிழல்தரும், பழமரங்களை வளரச் செய்தான். அன்னச் சத்திறங்களைத் தோற்றுவித்து அதில் விரும்பிய அளவு உணவு கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தான். சாலைகளில் பல தங்கும் விடுதிகளைக் கட்டுவித்தான். பலமருத்துவச் சாலைகளைத் தோற்றுவித்தான். வண்டிகளில் உணவையேற்றி பற்பல கிராமங்களுக்குச் சென்று வழங்கினான். தங்களது மதத்திற்குரிய அணிகளை (விபூதி, திருமண் முதலிய) நெற்றியில் அணிந்து கொள்ளத் தூண்டினான். இவன் எப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழுதும் நெற்றியில் விபூதி துலங்க, கழுத்தில் ருத்ராக்ஷமிலங்கக் காணப் பெற்றான்.

திருவண்ணாமலையில் கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டுவித்தான். காவிரியின் வடகரையில் பீமேஸ்வராலயத்தைக் கட்டுவித்தான். தோணிபுரத்திற்கு நான்கு புறமும் கோபுரங்களைக் கட்டுவித்தான். ஒவ்வொரு சிவாலயங்களிலும் விளக்கெரிக்கவும், நறுமணமலர்களுக்காகவும், பல நந்தவனங்களையும் கோவிலுக்குத் தேவையான தென்னை, கரும்பு, வாழை முதலிய தோப்புகளை உண்டாக்க நிலமும், கார்த்திகை மாதங்களில் சிவ-விஷ்ணுஸ்தலங்களில் விளக்குகள் எரிக்க தனிப்பட்ட நிலங்களையும், பற்பல சிவாலயங்களில் நீராழிகளையும், அதில் நீராழி மண்டபங்களையும் ஏற்பாடு செய்தான். பெரும் விழாக்களுக்குத் தேவையான பல ஏற்பாடுகளைச் செய்தான். இவன் மனைவி 'வித்யுல்லதா' சங்கர நாராயணரிடம் பக்தி பூண்டவள். தனது தந்தையின் தேசத்திலிருக்கும் சங்கர நாராயணரை தரிசிக்க வேண்டும் என்று விரும்பினாள். இதனைத் தனது கணவன் பீமசோழனிடம் விண்ணப்பம் செய்ய எண்ணினாள். ஆனால், அவளது கனவில் சங்கர நாராயணர் தோன்றி "அம்மையே! உனது விருப்பத்தை நான் அறிவேன், நான் உனக்கு இலிங்கவடிவில் காட்சி கொடுக்கிறேன் நீ. பெருவுடையார் கோவிலுக்கு வடக்கு திசையிலும். கொங்கணேஸ்வரர் கோவிலுக்குத் தெற்கிலும், எனக்கு ஒரு ஆலயம் எடுப்பாயாக, இலிங்கவடிவில் காணப்படும் என்னை அவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்து நியமத்துடன் காண்பாயாக. உனது வயிற்றில் ஒரு ஆண் குழந்தை பிறக்கும். ராஜேந்திர சோழன் என்ற பெயருடனும் புகழுடனும் விளங்குவான்". என்று கனவில் தோன்றிய சிவபெருமான் கூறி மறைந்தருளினார், காலையில் எழுந்தவுடன் லிங்கத் திருமேனியைக் கண்ட அரசியும், அரசனும் மகிழ்ந்தனர். கர்பகிருகம், கோபுரம், ஆகியவற்றுடன் ஆலயம் கட்டப்பெற்று குடமுழுக்கும் சிறப்பாக நடந்தது. அரசி 'வித்யுல்லதா' தோத்தரித்து வணங்கினாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதனால் மகிழ்ந்த சிவபெருமான் எனக்கு அருகில் உள்ள கிணறு 'குப்தகங்கை' பாவங்களைப் போக்கவல்லது. எவன் விசாக நட்சத்திரத்தில் இக் கிணற்றுநீரில் ஸ்நானம் செய்கிறானோ அவனது வம்சம் விளங்கும். கார்த்திகை மாதம் சோமவாரத்தில் (திங்கட்கிழமை) இக்கிணற்றில் நீராடி பதினாறுவித உபசாரங்களுடன் என்னை நீங்கள் இரு வரும் வணங்குவீர்களாக. 'ராஜேந்திர சோழன்' என்ற பெயரில் உங்கள் மகன் விளங்குவான். இறைவன், மொழிந் தவண்ணம் சிவனைப் பூஜித்தனர். மகன் பிறந்தான். ராஜேந்திரன் என்று திருநாமமிட்டனர். சர்வலட்சணங் களுடன் மன்மதனைப் போன்று அழகாக இருந்தான். அனைத்துக் கலைகளையும் கற்றான். வாலிபப் பருவம் வந்தது இவனுக்கு 'கமலினி' என்ற பெயருடைய குலசேகர பாண்டி யனின் மகளைத் திருமணம் செய்துவைத்தான். இருவரும் தங்களது பெற்றோர்களான பீமசோழனுக்கும், வித்யுல் லேகாவிற்கும் பணிவிடை செய்தனர். 77 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து பின் கைலையை அடைந்தனர். அவர்களுக்குப் பிறகு ராஜேந்திரசோழன் அரசாண்டான்.

பத்தொன்பதாவது அத்தியாயம்

பீம சோழனுக்குப் பிறகு அவன் மகன் ராஜேந்திர சோழன் சிறப்பாக அரசாண்டான். சேரனையும், பாண்டி யனையும் வென்றான். அவர்கள் செலுத்தும் கப்பங்களைக் கொண்டு திருமுல்லைவாயில் திருப்பூந்துருத்தி, திருவெண்ணி யூர், திருநெல்லிக்கா, சிற்றேமம், ருஷிகானனம் ஆகிய ஊர்களில் சிவாலயங்களை எடுத்தான். இதைப்போன்று எண்பது (80) ஆலயங்களை கட்டி முடித்தான். இவ்வால யங்களில் பெரும் விழாக்களை எடுத்தான். ஒவ்வொரு ஊரி லும் அக்ரஹாரங்களை உண்டாக்கினான்.

முருகனுடைய ஆலயங்களைக் குன்றுகளில் கட்டுவித் தான். விஷ்ணு, கணபதி, துர்கை, சாஸ்தா முதலிய ஆல யங்களும் தோன்றின.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதாபருத்ரன் என்ற மன்னனைப் போரில் வென்றான், அவன் போரில் கண்களை இழக்குமாறு செய்தான். அவனால் கப்பமாகக் கொடுக்கப்பட்ட பொருளைக் கொண்டு மேலும் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. இவனால் இரண்டு நதிகள் உருவாயின (கால்வாய் வெட்டப்பட்டன) அவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தான். அவன் சூரியனை நிகர்த்த ஒளி பொருந்தியவனாக இருந்தமையால் அவனுக்கு 'வீர மார்த்தாண்டன்' என்ற பெயரைச் சூட்டினர். இவனது வாலிபப் பருவத்தில் அரசு முடிசூட்டிவிட்டு தனது 78-வது வயதில் தனது துணைவியுடன் சிவலோக ப்ராப்தி அடைந்தான்.

இருபதாவது அத்தியாயம்

வீர மார்த்தாண்டன் தனது முன்னோர்களைப் போல நாட்டை ஆண்டான். இவனது ஆட்சியின்போது வேத பாடசாலைகளும், சாஸ்திர பாடசாலைகளும் தோன்றின. சாலைகளின் இருமருங்கிலும் நல்ல பழம் தரும், நிழல் தரும் மரங்களைப் பயிராக்கினான். வழிப்போக்கர்களுக்காக இளைப்பார மண்டபங்களை உண்டாக்கினான். தீக்ஷிதர்கள் வேள்விகளை நிறைவேற்றினர். யாகத்தில் கொடுக்கப் பெற்ற அவியால் தேவர்கள் வயிறு புடைத்தனர். அக்னி ஹோத்திர வேள்விச் சாலையிலிருந்து கிளம்பும் புகை மண்டலம் சுவர்கத்திற்குச் செல்லும் படிபோல் தோன்றியது. இவன் காலத்தில் சுமார் அறுபது (60) ஆலயங்களைக் கட்டினான். மேலும் இவனுடைய முன்னோர் கட்டிய ஆலயங்களைப் பழுது பார்த்து அஷ்ட பந்தன குடமுழுக்கும் செய்தான்.

இவனால் கட்டப்பட்ட ஆலயங்களில் சில: திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர் முதலிய சப்தஸ்தான சிவஸ்தலங்களையும், கும்பகோணத்தில் சாரங்கபாணி, சக்ரபாணி, சாரக்ஷேத்ரம் முதலிய வைஷ்ணவ ஆலயங்களைக் கட்டுவித்தான். சோமேஸ்வரம், நாகேஸ்வரம், கௌதமேஸ்வரம், விஸ்வநாதர் ஆலயம் ஆகிய சிவாலயங்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

களைக் கட்டுவித்தான். மகாமகக் குளத்தைச் செப்பனிட்டான். சேர மன்னனின் மகள் மாணிக்கவல்லியுடன் திறமையாக ஆண்டுவரும் நாளில் ஒரு நாள் இவனது அரசவையிலிருந்த தேவசர்மா என்னும் ராஜ புரோஹிதர் மன்னன் விரும்பியபடி கொங்கணேஸ்வரரின் வரலாற்றைக் கூறலுற்றார்.

தத்தாத்ரேயரின் சீடர்களுள் ஒருவர் கொங்கணர். இவர் சிவபெருமானைக் குறித்து இமயமலையின் ஒரு சிகரத்தில் பஞ்சாக்னி மத்தியிலிருந்து கொண்டு நூறு ஆண்டுகள் தவமியற்றினார். இவனது தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் தோன்றினார்.

அன்பனே! உனது தவத்தால் யாம் மகிழ்ந்தோம். நீ உனது கார்யசித்தி பெற வேண்டுமாயின் 'சமீவனம்' என்னும் புனித இடத்திற்குச் செல். இச் சமீவனம் என்பது திருவையாற்றுக்குத் தெற்கே காவிரியிலிருந்து இரண்டு குரோச தூரத்தில் (4 மைல்) விண்ணாறு என்னும் நதி ஓடுகிறது. இந்த நதிக்குத் தெற்கே மணிமுத்தா நதி ஒன்று ஓடுகிறது. இதன் கரையில் 'சுதாபுஷ்கரிணி' என்ற பொய்கைக் கரையில் ஆனந்தவல்லியுடனுரை தஞ்சபுரீஸ்வரர் ஆலயம் உள்ளது. அவரை வணங்கி அங்கிருந்து ஈசான திக்கில் (தென்மேற்கில்) வசிஷ்டேஸ்வரர் வசிஷ்ட தீர்த்தக் கரையில் எழுந்தருளியிருக்கின்றார். அதற்கும் தெற்கே நான், கரதலேஸ்வரர் என்ற பெயரில் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளேன். அங்கு தேவ தீர்த்தம் என்ற பெயரில் ஒரு தீர்த்தம் உள்ளது. இங்கு பராசர முனிவர் தவம் செய்து சித்தி பெற்றார். கரிகாலன் என்னும் சோழ மன்னனால் கட்டப் பெற்ற பெருங் கோயில் பிருகன்நாயகி ஸமேத பிருகதீஸ்வரரை பிரதிஷ்டை செய்து வழிபட்டான். அக்கோயிலுக்கு வடக்கே 'கொங்கணேஸ்வரர்' என்ற பெயரில் ஒரு இலிங்கத்தை ஸ்தாபித்து வழிபடுவாயாக. இங்ஙனம் செய்தால் நீ ஸித்தி பெறுவாய் என்று சிவபெருமான் கூறியருளினார்". இதைக் கேட்ட கொங்கண முனிவர் மகிழ்ந்து இமயமலையிலிருந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தென்னாட்டிற்கு வரும் வழியில் கேதாரம், காஞ்சி, முதலிய புனித ஸ்தலங்களையும், புனித தீர்த்தங்களில் நன்னீராடியும், காவிரியை வந்தடைந்தார். சமீவனத்தை அடைந்து கொங்கணேஸ்வரரை உரிய இடத்தில் ஸ்தாபித்து வழிபட்டு ஸ்ரீ ருத்ர பஞ்சாக்ஷர மந்திர ஜபத்தால் தவமியற்றினார். (12) பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் இறைவன் விருஷ பாருடராக ஞானம்பாளுடன் கொங்கண சித்தருக்குக் காட்சி நல்கினார். கங்கையும், சந்திரனையும், தலையில் சூடியும், நீலகண்டம் விளங்க, முக்கண்ணுடன் காட்சி நல்கினான். கொங்கண சித்தர் எம்பெருமான் திருவடியில் விழ்ந்து வணங்கித் துதித்தார. இவரது துதியைக் கேட்டுச் சிவபெருமான் கூறலானார். "கொங்கண முனிவனே! உன்னால் ஸ்தாபிக்கப் பெற்ற இந்த லிங்கத்தில் நான் எப்பொழுதும் வாஸம் செய்வேன். எனக்கு முன்னுள்ள இந்த சித்த தீர்த்தத்தில் மூழ்கி (அய்யன் குளம்) என்னை எவனொருவன் வணங்குவனோ அவன் எப்பொழுதும் என்னருகில் வசிப்பவனாவான். இங்கு இறப்பவனுக்கு முறைப்படி கைலாச பதவியை அளிப்பேன். புண்ணிய காலங்களிலும், இரண்டு பருவ காலங்களில் உள்ள பிரதோஷங்களிலும், சோமவாரங்களிலும், சிவராத்திரி முதலிய புனித தினங்களிலும் என்னை எவன் பூஜிக்கின்றானோ அவனுக்கு யம தூதர்களால் எந்த பயமும் இல்லாமற செய்கிறேன். உனது தவம் சித்தியாயிற்று. நீ கைலாயத்தை அடைவாயாக" என்று கூறி முனிவருக்கு வரமளித்து அந்த லிங்கத்தில் மறைந்தருளினார். முனிவரும் சூரியனை நிகர்த்த வான ரதத்தின் மூலம் கைலையை அடைந்தார்.

இருபத்தொன்றாவது அத்தியாயம்

சூதர் கூறுகிறார் :

சிவனுடைய கதையில் விருப்பமுடையவரே! கொங்கணேசருடைய மற்றொரு லீலையைக் கூறுகிறேன் கேட்பீர்களாக என்று சூத முனிவர் கூறலானார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவசர்மா வீரமார்த்தாண்டனிடம் தொடர்ந்து கூறலானார். தஞ்சையில் வாழ்ந்த வணிகர் ஒருவருடைய மகள் கொங்கணேஸ்வரரிடம் மிகுந்த பக்தி பூண்டவள். திருமணப் பருவத்தை அடைந்தாள். அவளுக்கு அவளின் தந்தை, திருமணத்திற்காக ஏற்பாடுகளைச் செய்தான். இதனை அறிந்த அந்தப் பெண் "பிறந்து பிறந்து இறக்கும் மனிதர்களை நான் திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லை. காமனை அழித்த அந்த (சிவபெருமானையே) கொங்கணேசரையே திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன்". என்று கூறி திருமண ஏற்பாடுகளைத் தகர்த்து வந்தாள். இறைவனையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தியானித்தும் வந்தாள். ஒருநாள் இரவு மக்கள் அனைவரும் தூங்கிக் கொண்டு இருந்தனர். இந்த நிலையில் தேவர்களும், முனிவர்களும் புடைசூழ எம்பெருமான் கொங்கணேஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளினார். அந்த வியாபாரியின் பெண்ணின் கழுத்தில் மங்கல நாணைக் கட்டினார். மங்கல ஒலி எழுந்தன.

காலையில் அந்த வணிகன் தனது மகளைக் காணுமல் ஆலயத்திற்கு வந்தான். அப்போது புதுத்தாலியுடன், இருக்கும் மகளைக் கண்டான். 'தான் அப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு விட்டேன்.' என்று கொங்கணேஸ்வரர் அசரீரியாகக் கூறினார். அருள்மிகு ஞானம்பாளுக்கு கிழக்கில இன்றும் 'அன்னபூர்ணு' என்ற பெயரில் சிலாரூபமாக அருள்பாலித்து வருகிருள் என்று தேவசர்மா கூறிமுடித்தார்.

இந்த வரலாற்றைக் கேட்டதும் மன்னன் இறைவனது திருவிளையாடலில் ஈடுபட்டு பக்தி கொண்டான். கொங்கணேஸ்வரரின் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கும் செய்தான். அவனுடைய மகன் "கீர்த்தி சோழன்" (புகழ்ச் சோழன்) என்ற பெயரில் விளங்கினான். அவனுக்குப் பட்டம் கட்டிவிட்டு தனது 66-வது வயதில் இறைவன் திருவடியை எய்தினான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சூத முனிவர் கூறுகிறார் :

புகழ்ச்சோழன் சோழ மண்டலத்தை மிகத் திறமையாக ஆண்டான். அவனுடைய மனைவி சூர்யசேகர பாண்டியனின் மகள் கமலினி. தனது முன்னோர் எழுப்பிய ஆலயங்களை புனருத்தாரணம் செய்தான். இவன் ஒரு முருகபக்தன். நீண்ட நாட்களாக மகப்பேறின்றி வருந்தினான். சஷ்டிவிருதம் இருந்தான்.

ஒருநாள் முருகன் கனவில் தோன்றினான். "அன்பனே! 'கொங்கணேசரின் ஆலயத்திற்கு நிருதி திக்கில் (வடமேற்கு) பூமியில் புதைந்து கிடக்கிறது குகபர்வதம். அதனை புனருத்தாரணம் செய்வாயாக. அங்கு சக்தி கூபம் என்ற பெயரில் ஒரு கிணறுள்ளது. அதில் நீராடி சஷ்டி விரதம் இருந்து என்னைத் துதிப்பவர்களுக்குச் சந்ததி தோன்றும். கார்த்திகை மாதம் கிருத்திகையில் என்னைத் தரிசிப்பவர்களின் விருப்பம் நிறைவேறும். நீ எனது ஆலயத்தை எழுப்புவாயாக" என்று கூறி மறைந்தான். மன்னன் மகிழ்ந்து சிற்பிகளை அழைத்து ஆலயத்தை எழுப்பினான். படிகளுடன் கிணற்றை எழுப்பினான். இறைவன் கனவில் கூறிய வண்ணம் வழிபாடு செய்து தோத்தரித்தான்.

இருபத்து மூன்றும் அத்தியாயம்

கந்தன் :

மன்னா! உனது பக்திக்குக் கட்டுப்பட்டேன். உனது மகன் 'ஜய சோழன்' என்ற பெயரில் விளங்குவான். இந்த க்ஷேத்திரம் சக்தி க்ஷேத்ரம் ஆகையால் சக்தி, கணபதி, சாஸ்தா, விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கு ஆலயங்களை எடுப்பாயாக என்று கூறி மறைந்தான். எட்டு சக்திகளுக்கும் ஆலயம் எடுத்தான். ரேணுகாதேவியை நடுவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைத்தும் தெற்குத் திசையில் கணபதி, சாஸ்தாவை மேற்கிலும், நருசிம்மர், நீலமேகப்பெருமாள், ஆகியோருக்கு வடக்கிலும், கைலாசநாதர் வசிஷ்டேசர், வைத்யநாதர், மாரி ஆகியோருக்கு கிழக்கிலும் ஆலயங்களைப் புதுப்பித்தான். மற்றும் அங்கங்கு உள்ள சக்திகளுக்கு உரிய ஆலயங்கள் கட்டப்பட்டன. கீர்திமதி எனும் பெயரில் ஒரு நதியை வெட்டினன்.

இந்நிலையில் இவனது துணைவி கருவுற்ருள். நல்ல நாளில் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தைக்கு ஜய சோழன் என்று பெயரிட்டான். வளர்பிறைபோல் மகன் வளர்ந்தான். சகல கல்வியிலும் தேர்ச்சி பெற்ருன். கேரள மன்னனின் மகள் காஞ்சனமாலையை இவனுக்குத் திருமணம் செய்து முடித்தான். எழுபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து இறைவன் திருவடியைப் பெற்ருன். இவன் மகன், தந்தைக்குப் பிறகு சோழநாட்டை அரசாண்டான். முதறிஞர்களின் ஆலோசனையின்படி நாட்டை ஆண்டான். கஞ்சனூர், கதலீவனம், ஸ்ரீ வாஞ்சியம் முதலிய ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தான். பெருவுடையார் கோவிலைப்போல் முக்கால் பங்கு இருக்குமாறு ஒரு ஆலயத்தை ஜயசோழபுரத்தில் கட்டினன்.

ஸ்ரீமுஷ்ணம், உளுந்தூர்பேட்டை, முதுகுன்றம், காலஹஸ்தி, முதலிய ஊர்களில் சிவாலயங்களை எழுப்பினன். இவனுக்கு ஒரு பிள்ளை. அவன் பெயர் கனகசோழன். இவனுக்குப் பட்டம் கட்டி விட்டுத் தனது 60வது வயதில் இறைவன் திருவடியை எய்தினன்.

இருபத்து நான்காவது அத்தியாயம்

கனக சோழன் சம்பகாங்கி என்பவளைத் திருமணம் செய்து கொண்டு சிறப்பாக நாட்டை ஆண்டான். தனது நாட்டில் உள்ள அனைவரும் விபூதி ருத்ராக்ஷங்களைத் தரிக்குமாறு செய்தான். அவனது நாடு முழுவதும் வேதங்கற்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிறுர்களின் வேத வொலியும், சாஸ்திர சர்ச்சைகளின் ஒலியும், யாகத்தில் வோதப்படும், வேதவொலியும், அங்காடிகளில் பொருட்களை விலைகூறும் வியாபாரிகளின் ஒலியும், மரவர்களின் நாணெலி, வாணெலி, இசையொலி சிவாலயங்களை எழுப்பும் சிற்பிகளின் சிற்றெலியுமாக இருந்தன. காலாகாலங்களில் மழை பொழிந்து மக்கள் இன்பமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தனர்.

ஒரு சமயம் காவிரியின் தண்ணீர் (கிளைநதியான அரிசிலாறு) திருவலஞ்சுழியில் வெள்ளை விநாயகருக்கு எதிரில் ஒரு பொந்து வழியாக பாதாளத்துக்குப் போய் விட்டது. பாசனமில்லாத பகுதிகளில் மக்கள் நீர் பாய்ச்ச முடியாமல் பயிர் அழிந்தன. ஒற்றர்மூலம் இச் செய்தியை அறிந்த கனகசோழன் உடன் தனது படையுடன் சென்றுன். காவிரிநீர்புகும் அந்த பொந்தை அடைத்தான். பயனில்லை. என்ன செய்வது என்ற மனக்கலக்கத்துடன் இறைவனையும்; வெள்ளை விநாயகரையும் வழிபட்டு வணங்கினுன். அப்போது அசரீரியாக இறைவன் கூறினர் :

"மன்னு ! இந்தப் பொந்து அடைக்கப்பட்டு மீண்டும் காவிரி நீர் வழக்கமாக ஓடவேண்டுமாயின் நீயோ அல்லது பெருந்தவ முனிவனே உங்களிருவரில் ஒருவர் அந்தப் பொந்தில் உயிருடன் இறங்க வேண்டும். பிறந்தவன் என்றுவது ஒருநாள் இறந்து படுவான். சிபி புருவுக்கு உடலைக் கொடுத்தான். ததீசி எலும்பைக் கொடுத்தான். இல்லை என்று கூருத கர்ணன் தனது உயிரினும் மேலான கவச குண்டலங்களை ஈந்தான். உடல் அழியும், ஆனுல் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்" என்று கூறியது வாணெலி. இதனைச் செவிமடுத்த மன்னன் இறைவனை வணங்கி பொந்தில் இறங்க நிச்சயித்தான். இந்நிலையை அறிந்த அவனது அமைச்சர்.

மன்னு ! கும்பகோணத்திற்கு வடக்கே (மேற்கே) கொட்டையூரில் 'ஹேரண்டமுனிவர்' ஒருவர் தவமியற்றுகின்றுர். அவரை தரிசித்து விட்டு வரலாம்" என்று மந்திரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறினான். மன்னனும் சம்மதித்து தனது மனைவியுடனும், மந்திரி, படைகளுடன் சென்றான். முனிவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் மன்னன் தன் துணைவியுடன். "நீண்ட ஆயுளுடன் வாழ்வாயாக. சுமங்கலத்துடன் வாழ்வாயாக. உங்களுக்குப் பிள்ளைப்பேறு கிட்டுவதாக" என்று ஆசி வழங்கினார் முனிவர், இதை செவிமடுத்த மந்திரி மகிழ்ந்தான், ஆனால் மன்னன் கலக்கமடைந்தான். "மக்களின் நன்மையின் பொருட்டு நான் பொந்தில் இறங்க வேண்டும் என்று இருக்கின்றேன். ஆனால் முனிவரோ ஆசி வழங்குகிறாரே" என்று கலங்கினான். இந்த நிலையில் அமைச்சர் முனிவரிடம் கூறினார்.

ஸ்வாமி ! உங்கள் வாக்கு என்றும் பொய்க்காதது. திருவலஞ்சுழியில் காவிரி ஒரு பொந்தில் வீழ்ந்து நீர் மறைந்து விடுகிறது. இதனால் மற்ற பகுதிகளில் விளைச்சல் இல்லாமல் மக்களும், பயிரும் துன்பமடைகின்றனர். எந்த வித உபாயத்தாலும் பொந்தை அடைக்க இயலவில்லை. இறைவனுடைய அருளால் ஒரு அசரீரி உண்டாயிற்று. அரசனே அல்லது முனிவனே இந்தப் பொந்தில் உயிருடன் இறங்கினால் காவிரி வழக்கம்போல் ஓடி மக்களுடைய துன்பம் நீங்கும் என்று கூறியது. நாட்டையும், நாட்டு மக்களையும் காக்க வேண்டியது அரசனுடைய தர்மம். தாங்களோ தவ சிரேஷ்டர், தாங்கள் இந்த பிலத்தில் (பொந்தில்) இறங்கினால் நலம், தாங்கள் மன்னனுக்கு ஆசிகள் வழங்கிய வாக்கும் பொய்க்காது. தாங்கள் என்றுமே சிவனுடைய பக்தர். அவன் திருவடியில் வாழ் வீர்கள்." என்று வெகு நாசூக்காக மந்திரி கூறி முடித்தான். இதைச் செவிமடுத்த ஏரண்ட முனிவர் மன்னன், தேவி, மந்திரி, படைசூழ பொந்திற்கு வந்து சேர்ந்தார்.

முனிவர் கூறினார்! மன்னா! நான் முதியவன். தவத்தினால் இளைத்துப் போனவன். இவ்வுடல் மற்றவருக்கு உபயோகப் படுவதை விரும்புகிறேன். ததீசி தேவர்களுக்காக தனது உடலைக் கொடுத்தான். அதைப் போல் நான் மக்களுக்காக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனது உடலைத் துறக்கிறேன், எனது வாக்கும் பொய்க்காது. மன்னன் சிரஞ்ஜீவியாகவும், தேவி சுமங்கலியாகவும் சிவகைங்கர்யம் செய்து வரும் சத்புத்திரன் ஜனிப்பானாக! என்று கூறினார்.

இதைக் கேட்ட மன்னன்! நான் இருக்கும் போது தாங்கள் உயிர் துறத்தல் கூடாது மேலும் எனக்கு சிவ பக்தனைக் கொன்ற பாபமும், பிர்மஹத்தி பாபமும் தோன்றும்ஆகவே நீங்கள் இந்த முடிவுக்கு வருதல் கூடாது, என்றான் மன்னன். உடன் ஏரண்ட முனிவர் :—

'மன்னா! உலகத்தில் உள்ள அனைவரின் நன்மையின் பொருட்டு எனது உடலைத் துறக்கின்றேன். மேலும் சிவனுடைய சந்நிதியில் இவ்வுடலைத் துறப்பதால் எனக்கு சிவசாயுஜ்யம் கிடைக்கும். இதனால் உனக்கு எந்த தோஷமும் ஏற்படாது, என்று கூறியதும் மலர் மழை பொழிந்தது. தேவர்கள் வானில் கூடி துந்துபிகளை முழங்கினர்.

ஹேரண்ட முனிவர் காவிரியில் நீராடி, விபூதி ருத்ராக்ஷங்களைத்தரித்துக் கொண்டு சிவனையும், வெள்ளை விநாயகரையும் வணங்கினார். சிவனை தியானித்த வண்ணம் பொந்தில் குதித்தார். அந்தப்பொந்திலிருந்து ஒரு லிங்கம் வெளிப்பட்டது. அதன் பெயர் ஹேரண்டலிங்கம் என்று புகழ்பெற்றது. உடனே வழக்கம் போல் காவிரி ஓட ஆரம்பித்தது. வானுலக ரதத்திலிருந்து ஹேரண்ட முனிவர் பேசலானார்.

மன்னா! மக்களின் நன்மையின் பொருட்டு எனது உடலைத் துறந்து கைலாயம் செல்கிறேன். நான் வழிபட்டு வந்த 'கொட்டையூர்' ஆலயத்திற்குத் திருப்பணி செய்வாயாக. என்றார்.

அவரது விருப்பப்படியே கொட்டையூர் கோடீஸ்வரரின் ஆலயத்தைக் கட்டினான். வலஞ்சுழியில், கோபுரம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரகாரம், முதலியவற்றுடன் சிவாலயத்தை எடுத்தான். கும்பகோணம் நாகேஸ்வராலயம். போன்ற பல ஆலயங்களைக் கட்டி திருப்பணி செய்தான். 73 ஆண்டுகள் அரசு பிரிபாலனம் செய்தான். இவனுக்கு சுந்தர சோழன் என்ற பெயரில் ஒரு மைந்தன். இவனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு இறைவன் திருவடியை எய்தினன்.

இருபத்தைந்தாவது அத்தியாயம்

முனிவர்கள் :-

இவ்வளவு சிறப்புவாய்ந்த நல்ல பல திருப்பணிகளைச் செய்த சோழமன்னர் அரியாமல் செய்த கொலை எப்படி நடந்தது? அந்தபாபம் எங்கு? எப்படி தொலைந்தது? என்று கூறவேண்டும் என்றனர். இதனைச் செவிமடுத்த சூத முனிவர் மற்ற முனிவர்களுக்குக் கூறலுற்றார்.

சுந்தரசோழன் தனது முன்னோர்களைப் போல் நாட்டை ஆண்டு கொண்டு வந்தான். சேரன் மகள் சித்ர வல்லியை திருமணம் செய்து கொண்டான். விபூதி ருத்ராஷங்களை அணிந்து கொண்டும், முன்பு குலோத்துங்கனுக்கு இறைவனால் கொடுக்கப் பெற்ற தங்கமயமான பட்டத்தை கட்டிக்கொண்டும், சிவனடியார்களுக்கு கைங்கரியங்களைச் செய்துகொண்டும், மூதறிஞர்களின் அறிவுரையின் படியும் நாட்டைச் சிறப்பாக ஆண்டும்வந்தான். பாண்டியனுக்குத் தன் மகள் 'உத்பலவதி' யைத் திருமணம் செய்துவைத்தான். இவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தான். இக் குழந்தைக்குக் 'காலகாலன்' என்ற பெயரைச் சூட்டினன், மன்னன். இவனுக்கு கேரள மன்னனின் மகள் குணவதியைத் முறைப்படித் திருமணம் செய்துவைத்தான். நாட்கள் சென்றன.

ஒருசமயம் கர்நாடக தேசத்திலிருந்து ஒரு அந்தணன் தனது மனைவியுடன் ராமேஸ்வரயாத்திரையை மேற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டு தஞ்சையை வந்தடைந்தான். அவன் அரசனைக் காணவிரும்பி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு மன்னனிடம் கூறுமாறு வாயிற்காப்போரிடம் கூறினன். அக் காவலன் சென்று அரசவையிலிருந்த மன்னனிடம் கூறினன். மன்னனின் உத்திரவால் அந்தணன் அரசபைக்குச் சென்று அரசனை வணங்கி தன்னை மீண்டும் அரசனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

'மன்னு! நான் சேதுயாத்திரைக்காகச் செல்லும் வழியில் இங்குவந்தேன். என்னுடன் எனது துணைவியையும் அழைத்து வந்துள்ளேன். தற்போது அவள் கருவுற்ற நிலையிலிருப்பதால் அவளால் இனி யாத்திரை மேற்கொள்ள இயலாது. மன்னனாகிய நீ மக்களுக்கு தாயும், தந்தையு மானவன். ஆகவே அவளை உனது பொருப்பில் அடைக் கலப் பொருளாக வைத்து யாத்திரை போக விரும்பு கிறேன்'. என்று கூறினன்.

மன்னன் இதற்குச் சம்மதித்து தம்பதிகளை முறையாக உபசரித்தான். அந்தணனின் மனைவியை தனது துணைவி யுடன் அந்தப் புரத்திற்கு அனுப்பி அவளுடைய அரண் மனையில் வசிக்க ஏற்பாடு செய்தான். ஓராண்டு சென்றது அந்தணன் மனநிறைவோடு சேது யாத்திரையுடன் பல தலங்களைத்தரிசித்துக் கொண்டு சேது சென்றான். கங்கை யிலிருந்து கொணர்ந்த நீரால் ராமலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து திரும்பி வரும் வழியில் மீண்டும் தஞ்சையை வந்தடைந்தான்.

இந்நிலையில் இரவில் இவ்வந்தணந்தன் அரண்மனையில் பிரவேசித்தான். "தனது மனைவி இவள்" என்று அறிந்து அவளது கரத்தை ஆவலுடன் பற்றினன். இருளில் தனது கரத்தைப் பற்றியது தனது கணவன் என்பதை அறியாத அந்த மாது ஓல மிட்டாள்.

அரசன் தந்தையாகவும், அரசி தாயாகவும் இருந்து காப்பாற்றி வந்தனர். இந்நிலையில் இப்படி ஆயிற்றே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்று கதறினுள். அரசனின் ஆணைப்படி அவ் அந்தணனை சிரச்சேதம் செய்தனர். இவையனைத்தும் இருளில் நடைப் பெற்றது. சிரச்சேதம் செய்தவனை ஒளியில் பார்த்தபோது. அவன் தனது கணவன்தான் என்று அறிந்த அந்த பிராம் மணி கதறினுள். உடன்கட்டைக்கு ஏற்பாடு செய்யுமாறு அரசனிடம் அவள் வேண்டிக்கொண்டாள். அரசன் அவளை சமாதானம் செய்தான் பயனில்லை.

இறுதியில் பிராம்மணியின் விருப்பப் படி சிதை மூட்டப்பட்டது. அதில் அவள் வீழ்ந்து உயிர்துறந்தாள். மன்னன் கவலை கொண்டான். அநாவசியமாக தன் ஆட்சியில் பிரம்மஹத்தியும், அதனுல் பெண் கொலையும் செய்த பாபத்தைப் பெற்றுவிட்டேனே" என்று மிகவும் வருந்தினுன்.

இதனை அறிந்த அமைச்சர்கள் மன்னு! வருந்தாதீர்கள் காலத்தால் செய்யப்படும் செயலனைத்தும் இறைவனுல் செய்யப்படுவனவே. பிருமஹத்திக்குரிய பிராயச் சித்தம் செய்வீராக. அந்தணபத்தினி அவளுடைய வற்புறுத்தலால் அவளே தன்னை மாய்த்துக் கொண்டனள் அதனுல் உமக்கு பாவம் கிடையாது என்றனர்.

விரதம், தானம், முதலியவற்ருல் பெண்கொலைக்குரிய தோஷத்தை நீங்கினுன் மன்னன். அந்தணனுக்கு முறைப் படி 10, 12ஆம் தினங்களுக்குரிய கடமைகளை மன்னனே செய்து முடித்தான். கயையில் பிண்டம் போட ஏற்பாடு களைச் செய்தான்.

இருபத்தாருவது அத்தியாயம்

முனிவர்கள் சூத முனிவரிடத்தில் வேண்டிக் கொண் டனர். முனிவர் பெருமானே! பற்பல புண்ணியச் செயல் களைச் செய்த சோழமன்னன் அறியாமற்செய்த கொலைப் பாவத்தை எவ்வாறு, எங்கு போக்கிக் கொண்டான்? என்பதை எங்களுக்கு விளக்கவேண்டும் என்று கோரினர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதைச் செவிமடுத்த சூத முனிவர் கூறலானார். முனிவர்களே! அந்தணனைக் கொலை செய்தமையால் இரவு பகலாக துன்பங்களை அனுபவித்தான் மன்னன். இதனால் அவனது பொன்மேனியின் ஒளி மங்கியது. நாட்டில் மழையில்லை. உணவு பற்றுக்குறையேற்பட்டது. இரவு நேரங்களில் நாய்கள் ஊளையிட்டன. இது போன்ற தீச்சகுனங்கள் தோன்றின. இவைகளைக் கண்ட அரசனும், அந்தணர்களும் 'பலவித சாந்திகளை' நோற்றனர். மன்னன் தனது அமைச்சரை அழைத்து இதனாலுண்டாகும் துன்பங்களை நீக்குதற்குரிய உபாயங்களை அறியுமாறு கேட்டுக் கொண்டான். பிர்மஹத்தி எப்பொழுதும் என்னைத் தொடர்கிறது. அது கருப்பு நிறமாகவும், பயங்கரமான முகத்துடனும், உடல் முழுதும் ரோமம் நிறைந்ததும், தெத்திப் பற்களுடனும், கையில் கோலுடனும் தோன்றுகிறது. இது என்னை எப்பொழுதும் அதட்டிக்கொண்டும், பயமுறுத்திக் கொண்டுமுள்ளது. இந்தத் துன்பத்திலிருந்து நீங்கி இன்பம் பெறுதற்குரிய வழியை அறிஞர்களிடம் கேட்பீராக. அவர்கள் எதைக் கூறுகின்றனரோ அதனை உடன் செய்ய ஏற்பாடுகளைச்செய்க என்று மன்னன் கூற்றைக் கேட்ட அமைச்சர் அறிஞர்களுடன் விவாதித்துத் தனது தலைவனிடம் கூறினர்.

'மன்னா! அறியாமையாற் செய்த செயலால் ஏற்பட்ட பாவத்தைக் கீழே காணும் நற்பணிகளால் போக்கிக் கொள்ளவியலும் என்றனர் வேதம் கற்ற அறிஞர்கள். ஆகவே பல சிவாலயங்களைக் கட்டுவீராக. காவிரியின் இருமருங்கிலுமுள்ள ஸ்வயம்பு வாயும், முனிவர்கள் பூஜித்த தாயுமுள்ள சிவாலயங்களை எடுப்பித்தும், புதுப்பித்தும், செய்வீராக. க்ஷேத்திரங்கள் தோறும் அக்ரஹாரங்களை உருவாக்குவீராக. பதினறுவித தானங்களை பதினறுமுறை செய்வீராக. கன்னிகாதானத்திற்கு உதவுங்கள். எளியவர் தலைவனற்ற விதவைகள், முடவர், குருடர் முதலியவர்களுக்கு உதவி செய்யுங்கள். அன்ன சத்திரங்களையும், மடங்களையும், உத்யானவனங்களையும், பொய்கைகளையும் கட்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வீராக.சுவர்ண துலா தானம் செய்வீராக. அதே இடத்தில் ஆயிரம் பசுக்களை தானம் செய்வீராக கங்கை, காவிரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடுவீராக. சேதுவை அடைந்து நீராடி புனிதத் தன்மையைப் பெறுவீராக. அங்கு ராமலிங்கசேராலயத்தில் மண்டபங்களைக் கட்டுவீராக. ஆக மேலே கூறப்பட்டவைகளால் உங்களது பிர்மஹத்தி தோஷம்நீங்கும் என்று வேதம் வல்ல அறிஞர்கள் கூறினர்' என்று மந்திரி அரசனிடம் கூறினர்.

அந்தணர்கள் கூறியவண்ணம் மன்னன் நதிகளிலும், புனிதநீர் நிலைகளிலும் நீராடி சேதுவை அடைந்தான். அங்கு நீராடினன். ராமேஸ்வரத்திற்கு வடக்கில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டினன். அங்கு பதினறு வகை தானங்களை பதினறு முறை வழங்கினன். காவிரிக் கரையிலமைந்த புனித ஸ்தலங்களில் ஆயிரம் பசுக்களை வேதங்கற்ற அறிஞர்கட்கு அறுசுவை உணவிட்டு தானங்கள் செய்தான். கோடிக் கணக்கான மக்களுக்கு அறுசுவை உணவை வழங்கினன். கன்னியாதானம் செய்ய உதவினன். கார்த்திகை மாதம், சிவ விஷ்ணு ஆலயங்களில் விளக்கு எரிக்க ஏற்பாடுகளைச் செய்தான். இவ்விதமாகவே பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மன்னனின் கனவில், அந்தணத் தம்பதிகள் தோன்றினர்.

இருபத்தேழாவது அத்தியாயம்

மன்ன! பிருமஹத்தி தோஷம் உனக்கு இன்னும் சிறிது இருக்கின்றது. அதனல் நீ உனது மனைவியுடன் காவிரிக்கரையில் உள்ள தலங்களுக்குச் சென்று நீராடி. இறைவனைப் பணிவீர்களாக. இப்புண்ணியத்தால் உன்னை அறியாமல் நீ செய்த பாபம் அழிந்து எங்களுக்கும் நற்கதி கிடைக்கும் என்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனது கனவைப் பற்றி அமைச்சர்களிடம் கூறிய மன்னன் தலயாத்திரை செல்ல திட்டமிட்டான். நாட்டைத் தனது மகனிடம் கொடுத்து யாத்திரை சென்ருன். திருவையாறு, கும்பகோணம், மாயூரம், திருவெண்காடு, திருச்சாய்க்காடு, குத்தாலம், திருவாரூர், வேதாரணியம், சுதகாரண்யம், ஸ்ரீ வாஞ்சியம், திருப்பைஞ் ஞீலி, இரும்பூளை, ஆலங்காடு, வைத்தீஸ்வரன் கோயில், பந்தணைநல்லூர் முதலிய பல தலங்களைத்தரிசனம் செய்து கொண்டு மத்யார்ஜுனமான திருவிடைமருதூர் வந்தடைந் தான். இரவு நேரங்களில் பிர்மஹத்தியால் பயப்படுத்தப் பட்டான். காவிரியில் நீராடி மகாலிங்கேஸ்வரரை வழிபட கோபுர வாயில் வழியாகச் செல்லுமுன் இவனிடத்தில் இருந்த பிர்மஹத்தி கோபுர வாயிலிலேயே தங்கிவிட்டது. அதனை இன்றும் நாம் காணமுடியும். மன்னன் எம்பிரானை யும், தேவி, கணபதி முதலியோரையும் வணங்கினுன். கண்ணீர்மல்க, மயிர்க்கூச்செரிய வணங்கிநின்ருன். அப் பொழுது மன்னனின் தோற்றம் ராகுவின் பிடியிலிருந்து விடுபட்ட சந்திரனை நிகர்த்தவனுகக் காணப்பட்டான். இறைவனைத் தோத்தரித்தான்.

அப்பொழுது அசரீரியாக ஒரு பேரொலி எழுந்தது. "மன்னு! நீ காவிரியில் நீராடி என்னை வணங்கினுய். அதனுல் உனக்கு பிர்மஹத்தி தோஷம் நீங்கியது. நீ இங்கு சிவகைங்கரியங்களைச்செய்து பிறகு திருபுவனத்திலும் திருப்பணிகளைச் செய்வாயாக" என்று ஒலித்தது. மன்னன் மகிழ்ந்தான், இடை மருதூரிலுள்ள ஆலயத்தில் நான்கு பிரகாரங்களையும், கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டினுன். மேற்குக் கோபுரவாயில் வழியாகச் சென்ருன். அங்கு சக்தி ஹஸ்தத்துடன் குமரக்கடவுளையும், சங்கரரை யும் ஸ்தாபனம் செய்தான். பிர்மஹத்தி முதலிய பயங்களி லிருந்து மன்னனைக் காப்பாற்றினுர் சிவபெருமான். மன்னன் மகிழ்ந்தான். புஷ்யப் பெருவிழாவெடுக்க ஏற்பாடு செய்தான் இடபாரூடராய் இறைவனை தரிசித்தான். அப்பொழுது எம்பெருமான் அசரீரியாகக் கூறலானுர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

